# சைவநீதி

# SAIVANEETHI

சித்திரபானு - ஆடி

JULY - AUGUST 2002



ரூபா 25/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

1. அடியர் காவற்காரப் பெருமாள் ........01
2. திருஞானசம்பந்தர் தேவாரம் ........02
3. நினைவிற் கொள்வதற்கு ........03
4. சிவத்திரவியங் கவர்தல் ........04
5. திருவாசகச் செழும்பாடல்கள் இறைவனை முன்னிலையில் ........06
6. சிவப்பிரகாசம் ........08
7. அறுவகைச் சமயம் ........10
8. கீழ்க்கணக்கு ........14
9. நீதி ........17
10. தாயே உனை மறந்துய்வனோ? ........19
11. நரகங்கள் ........23
12. பண்டைத் தவவாழ்க்கை ........25
13. துறவு அறம் ஆகாமை ........26
14. ஆலயங்களில் பிம்பப் பிரதிஷ்டையும் யந்திரப் பிரதிஷ்டையும் ........28
15. கொலை ........30
16. ஸ்ரீ கொங்கணர் (திருப்பதி) ........31
17. சிவபெருமான் தாயினும் நல்லவர் ........32

**சந்தா நேயர் கவனத்திற்கு**

* முகவரி மாற்றம் இருப்பின் எமக்கு அறியத்தரவும்.
* இதழ்கள் ஒழுங்காகக் கிடைக்காவிடின் எம்முடன் தொடர்புகொள்ளவும். கிடைக்காத இதழ்களை அனுப்பிவைப்போம்.

## சைவநீதி மாத இதழ்

**பெறுமதி விபரம்**

தனிப்பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

*சந்தா அனுப்பவேண்டிய முகவரி:*

*C. Navaneethakumar*
42, Janaki Lane, Colombo-04,
Sri Lanka.
T'Phone No: 595221

*K. Ratnasabapathy*
51, Thulasingam Street, Pudupet,
Madras - 600 002, South India.
T'Phone No: 8529984

**சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். -இதழ் நிர்வாகிகள்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி

SAIVANEETHY

மலர் 6 சித்திரபானு - ஆடி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 04

பொதுசன நூலகம்

**கௌரவ ஆசிரியர்:**
ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி, வித்துவான்,
**திரு. வ. செல்லையா**

**மதியுரைஞர்:**
**சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள்**

**திரு. D. M. சுவாமிநாதன்**
அறங்காவலர்,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

**திரு. அ. கந்தசாமி**
Chairman U.P.S.

**திரு. கு. மகாலிங்கம்**

**பதிப்பாசிரியர்:**
**திரு. வே. திருநீலகண்டன்**
லக்ஷ்மி அச்சகம்

**விநியோகம்:**
**திரு. க. சீனிவாசகம்**
ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

**நிர்வாக ஆசிரியர்:**
**திரு. செ. நவநீதகுமார்**
42, ஜானகி ஒழுங்கை, கொழும்பு-04.

தொடர்புகட்கு: 7.30 p.m. to 7.30 a.m.

தொலைபேசி: 595221

## அடியர் காவற்காரப் பெருமாள்

இது ஆடி மாதம். ஆடி மாதம் என்றால் எமது நினைவில் வருவது முருகவழிபாடு. குன்றுதோறும் நின்றாடும் குமரப் பெருமானுக்கு விழா எடுத்து வழிபடும் காலம் இது. குன்றில் எழுந்தருளி அருள்புரியும் குமரன் அடியார் மனக்குகையிலும் எழுந்தருளுகிறான். இதனால் முருகன் குகன் எனப் பெயர் பெறுவான். ஒருகால் நினைத்தால் இருகாலும் தோன்றி வேண்டினற்கு வேண்டியவற்றைக் கொடுப்பான் குகன்.

ஆறுபடைவீட்டில் அருள்புரியும் முருகன் கதிர்காமத்தில் நீங்காது உறைகின்றான். படைவீட்டிலும் உயர்ந்த தலம் கதிர்காமம். இது துவாதசாந்த தலம் எனப்படும். இங்கு மறைபொருளாய் இருந்து அருள்புரிவான்.

"மருவும் அடியார்கள் மனதில் விளையாடும்
மரகத மயூரப் பெருமாள்காண்."

"மணிதரளம் வீசி அணிஅருவி சூழ மருவு
கதிர்காமப் பெருமாள் காண்."

என்பார் அருணகிரிநாதர்.

முருகனை மனமொழி மெய்களால் வழிபட்டால் நட்சத்திரங் களால், கிரகங்களால் தீமை ஏற்படாது. வினை எம்மை வருத்தாது கொடிய கூற்றுவனுக்கும் பயப்படத் தேவையில்லை.

"நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயும்கொடுங் கூற்றென் செயும்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்பும் சதங்கையுந் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞானசம்பந்தர் தேவாரம்

**குடும்பத்தில் உள்ள குழப்பங்கள் தீர்வதற்கும், குடும்பத்தில் உள்ளவர் அனைவரும் அமைதியுடன் வாழ்வதற்கும் ஓதவேண்டிய பதிகம்.**

திருச்சிற்றம்பலம்

பண்: **கொல்லி** இராகம்: **நவரோசு**

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே. 1

போதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாது எனத்
தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே. 2

தொண்டணை செய்தொழில் துயர் அறுத்து உய்யலாம்
வண்டணைக் கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண்துணை நெற்றியான் கழுமல வளநகர்ப்
பெண்துணையாக ஓர் பெருந்தகை இருந்ததே.

அயர்வுளோம் என்றுநீ அசைவு ஒழி நெஞ்சமே
நியர்வளை முன்கையாள் நேரிழை அவளொடும்
கயல்வயல் குதிகொளும் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெயப் பெருந்தகை இருந்ததே. 4

அடைவிலோம் என்று நீ அயர்வொழி நெஞ்சமே
விடை அமர் கொடியினான் விண்ணவர் தொழுதெழும்
கடைஉயர் மாடமார் கழுமல வளநகர்ப்
பெடை நடை அவளொடும் பெருந்தகை இருந்ததே. 5

மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறைபல
கற்றநல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடைப் பேரல்குல் திருந்திழை யவளொடும்
பெற்றெனை ஆளுடைப் பெருந்தகை இருந்ததே. 6

குறைவளை வதுமொழி குறைவுஒழி நெஞ்சமே
நிறைவளை முன்கையாள் நேரிழை அவளொடு
கறைவளர் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை இருந்ததே 7

அரக்கனார் அருவருவரை எடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடுயாழ் பாடவே
கருக்குவாள் அருள் செய்தான் கழுமல வளநகர்
பெருக்கும் நீரவளொடும் பெருந்தகை இருந்ததே 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடியவன் பிரமனும் நினைப்பரிதாய் அவர்
அடியொடு முடியறியா அழல் உருவினன்
கடிகமழ் பொழில் அணி கழுமல வளநகர்ப்
பிடிநடை அவளொடும் பெருந்தகை இருந்ததே. 9

தாருறு தட்டுடைச் சமணர் சாக்கியர்கள்தம்
ஆருறு சொற்களைந் தடியிணை அடைந்துய்ம்மின்
காருறு பொழில்வளர் கழுமல வளநகர்ப்
பேரறத் தாளொடும் பெருந்தகை இருந்ததே. 10

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோடு இருந்த எம்பிரான்தனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன் செந்தமிழ்
விரும்புவார் அவர்கள் போய் விண்ணுல காள்வரே. 11

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

# நினைவிற் கொள்வதற்கு

ஆவணி

| | | | |
|---|---|---|---|
| 1 | 17-08-2002 | சனிக்கிழமை | **ஆவணி மாதப்பிறப்பு** |
| 4 | 20-08-2002 | செவ்வாய்க்கிழமை | **பிரதோஷ விரதம்** |
| 5 | 21-08-2002 | புதன்கிழமை | **நடேசரபிஷேகம், ஆவணி ஓணம், இருக்குவேத உபாகருமம்** |
| 6 | 22-08-2002 | வியாழக்கிழமை | **பூரணை விரதம், யசுர்வேத உபாகருமம்** |
| 10 | 26-08-2002 | திங்கட்கிழமை | **சங்கடஹரசதுர்த்தி விரதம்** |
| 14 | 30-08-2002 | வெள்ளிக்கிழமை | **கார்த்திகை விரதம்** |
| 15 | 31-08-2002 | சனிக்கிழமை | **ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி** |
| 19 | 04-09-2002 | புதன்கிழமை | **பிரதோஷ விரதம், செருத்துணையர் குருபூசை** |
| 20 | 05-09-2002 | வியாழக்கிழமை | **புகழ்த்துணையர் குருபூசை, அதிபத்தர் குருபூசை** |
| 21 | 06-09-2002 | வெள்ளிக்கிழமை | **அமாவாசை விரதம், இளையான்குடிமாறர் குருபூசை** |
| 23 | 08-09-2002 | ஞாயிற்றுக்கிழமை | **மறைஞானசம்பந்தர் குருபூசை** |
| 24 | 09-09-2002 | திங்கட்கிழமை | **சாமவேத உபாகருமம்** |
| 25 | 10-09-2002 | செவ்வாய்க்கிழமை | **விநாயகசதுர்த்தி விரதம்** |
| 26 | 11-09-2002 | புதன்கிழமை | **ரிஷிபஞ்சமி** |
| 27 | 12-09-2002 | வியாழக்கிழமை | **ஷஷ்டி விரதம், குலச்சிறையார் குருபூசை** |
| 29 | 14-09-2002 | சனிக்கிழமை | **ஆவணி மூலம், குங்கிலியக்கலயர் குருபூசை** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்திரவியங் கவர்தல்

சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்
அச்சுவேலி, யாழ்ப்பாணம்.

சிவபெருமானை நிந்தித்தலும், குரு சங்க மங்களை நிந்தித்தலும் ஈசுரத் துரோகங்களா கிய அதி பாதகங்களாவதுபோல, சிவனுக்கும் குரு சங்கமங்களுக்கும் உரிய திரவியங்களை அபகரிப்பதும் ஈசுரத்துரோகமாகிய அதி பாதக மாம். ஈசுரத்துரோகம் எவ்வகைப்பட்ட பிராயச் சித்தத்தாலும் தீராது.

சிவத்திரவியங்களைக் கவர்ந்தவர்களும், கவருதற்கு உடன்பட்டவர்களும், கவருதற்கு முயன்றவர்களும், அவரோடு நட்புக்கொள்ளு பவர்களும் நரகத்துன்பமடைந்து, அது அனுப வித்தபின் பூமியிலே மலக்கிருமி முதலியனவாகப் பிறந்திறந்து, பின் மனிதப் பிறவி எடுத்து நோய் களினாலும் பசியினாலும் வருந்துவார்கள்.

விதாதா என்பவன் அங்கதேசத்திலிருந்து செங்கோல் செலுத்தி அரசாட்சி செய்துவந்தான். அவனுக்கு அசித்தன் என்பவன் மந்திரியாய் இருந்தான். விதாதா இராச்சிய பரிபாலனஞ் செய்து வருங்காலத்திலே நாரதமுனிவர் அரச சபைக்குப் போனார். அரசன் அவரைக் கண்டு விரைந்து சென்று பூசித்துத் தனது சிங்காசனத் தின்மீது இருத்தி வணங்கினான். முனிவர் அரசனை நோக்கி மன்னனே! உன் பிதா சுவர்க்கலோகத்தில் இந்திரனது சபையில் இருக்கின்றான். அவன், தான் மேலவர்களது சொற்படி தருமத்தைச்செய்து இந்திரபோகத்தைப் பெற்றதாகவும், நீயும் நல்ல தருமவழியாக நடந்து அரசாட்சி செய்ய, தான் விரும்புவதாகவும் உனக்குச் சொல்லும்படி என் னிடத்திலே கூறினான் என்று சொல்லியருளி னார். அதன் பின்னர், அரசனது பக்கலாகவிருந்த அசித்தனை நோக்கி, "உன் பிதா நரகத்திலே மிகுந்த துன்பங்களை அனுபவித்துக் கொண்டி ருக்கின்றான். யான் அவ்விடஞ் சென்ற பொழுது உனக்குச் சொல்லும்படி மேல்வருமாறு கூறினான்.

"யான் அங்கதேசத்தில் ஒரு அரசனுக்கு மந்திரியாயிருந்தேன். பொருளாசை மிகுதியால் தருமத்தை வெறுத்துப் பெருந்திரவியத்தைத் தேடிப் பாதுகாத்தேன். அப்பெரும் பாவத்தால் இந்த நரகத்திற் கிடந்து வருந்துகின்றேன். யான் சம்பாதித்த பொருள்களை என் வீட்டுத் தூணடியிற் புதைத்துவிட்டேன். அதை என் மக னுக்குச் சொல்லவில்லை. இவைகளைத் தேவரீர் அவனுக்குக் கூறி அத்திரவியத்தை எடுத்துத் தருமத்தைச் செய்து, என்னையும் நரகத்தினின்று மீட்கும்படி சொல்லவேண்டும்."

இவ்வாறு அரசனும் மந்திரியும் தெரியும்படி கூறிய நாரதமுனிவர் மீண்டார். அசித்தன் தனது வீடு சென்று, தூணின் கீழ்த் தோண்டிப் புதையலை எடுத்துத் தருமங்களைச் செய்தான். புண்ணியங் களைச் செய்தமையால் அவன் தாதை நரகத்தி னின்று நீக்கிச் சுவர்க்கத்தை அடைந்தான்.

ஒரு தினம் அரசனும் மந்திரியும் பிராமணர் களை வருவித்துத் தானஞ் செய்யத் தொடங் கினார்கள். தொடங்கிய அவர்கள் உண்ணப்படு வனவற்றைப் படைத்தார்கள். சிலருக்கு வாழைப் பழம் படைக்காமையின், அப்பிராமணர்கள் கறுத்து நோக்கி, "எங்களுக்கு மாத்திரம் வாழைப்பழம் அரிதாகிவிட்டதா?" என்றார்கள். அரசன் அசித் தனை நோக்கி "நூறு வாழைப்பழம் அழைத்திடு"

வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

வாய்மை என்று சொல்லப்படுவது எது என்றால், அது எவ்வுயிர்க்கும் எவ்வகைத் தீங்கும் இல்லாத சொற்களைச் சொல்லுதலாம். 291

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்று கூறினான். அப்பொழுது ஒரு பிராமணன் "இதற்கு மேற்கே வீமேசுரம் என்னுஞ் சிவத்தலம் இருக்கின்றது. அவ்வாலயத்துக்குரிய வாழைச் சோலையில் பழுத்தகுலை இருக்கின்றது" என்று கூறினான். அசித்தன் என்பான் அங்கே நின்ற சிலரை நோக்கி, அதற்குத் தக்க விலையைக் கொடுத்து அனுப்பினான். அவ்வாலயத்தில் உள்ள வர்கள் சிவத்திரவியங்களின் உயர்வை எடுத்துச் சொல்லி, "சிவபெருமானுடைய அபிடேகத் திற்கன்றி வேறொன்றிற்குங் கொடுப்பதில்லை" என்றார்கள். ஏவலாளர்கள் திரும்பி வந்து அரசனுக்குக் கூறினார்கள். அசித்தன் அவர்களை நோக்கி, "விலையை அவர்களிடம் போட்டுவிட் டுத் தகுதியான நூறு வாழைப்பழங்கள் எடுத்து வாருங்கள்" என்று கோபத்தோடு சொல்லியனுப் பினான். மந்திரியினுடைய கட்டளைப்படி ஏவலர் கள் தோட்டத்தினுட்போய், பணத்தை எறிந்துவிட்டு, பெரியகுலையாக எடுத்துக் கொண்டுபோய்க் கொடுத்தார்கள். அரசனும் மந்திரியும் அப்பழங் களைப் பிராமணர்களுக்குப் பரிமாறித் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றினார்கள்.

அவ்வாலயத்திலுள்ள மெய்யன்பினராகிய மறையவர்கள் ஏவலாளர் வீசிய பணத்தை எடுக் காது, அரசனுக்கு முறையிட்டார்கள். அரசன் அவர்கள் கூறியதைச் செவிசாத்தினானல்லன்.

அரசன் சிவத்திரவியங் கவர்தற்கு இணங்கி யமையினால் அவன் பிதாவை நரகத்திற் செலுத் தினார்கள். அரசனுடைய நாட்டையும் மனைவி யையுங் குறுநிலமன்னர் கைக்கொண்டார்கள். அசித்தன் என்பவனது கண்களைத் தோண்டி எறிந்தார்கள். அவன் இறந்து நரகத்தை அடைந் தான். அவன் செய்த புண்ணியத்தினால் சுவர்க் கத்தை அடைந்த பிதாவும் நரகத்தை அடைந்தான். வாழைப்பழத்தைத் தந்தாலல்லது உண்ணோ மென்ற பிராமணர்களும், சிவனுக்குரிய அப்பழங் களைக் கொண்டுவந்தவர்களும், அத்தோட்டத் திலிருக்கிறதென்று அடையாளங் காட்டினவனும் ஆகிய இவர்கள் எல்லோரும் நரகத்தை அடைந் தார்கள். அரசன் கயரோகத்தினால் வருந்தி நர கத்தை அடைந்தான்.

## சோமேசர் முதுமொழி வெண்பா

**நின்னபிடே கப்பழத்தை நீண்மறையோர்க் கீந்தவிறை**
**துன்னுகுடி யோடழிந்தான் சோமேசா - பன்னில்**
**நடுவின்றி நண்பொருள் வெ∴கிற் குடிபொன்றிக்**
**குற்றமு மாங்கே தரும்.**

நன்றி:- **சைவப்பிரகாசிகை**
ஐந்தாம் புத்தகம்

எந்த உயிரையும் கொல்லாத ஒரு சந்நியாசி ஒரு ஏரிக்கரைமேலே போனார். போகும்போது ஒரு செம்படவன் அந்த ஏரியிலே மீன் பிடித்தான். சந்நியாசி செம்படவனைப் பார்த்து "ஐயோ! நீ எப்போது கரை ஏறுவாய்?" என்றார். "ஐயா, என் பறி நிரம்பினால் கரை ஏறுவேன்" என்றான்.

இரண்டு மல்லகசெட்டிகள் ஒருவரோடு ஒருவர் மல்யுத்தம் பண்ணினார்கள். ஒருவன் மற்ற வனைக் குப்புறத்தள்ளி, புரட்டிப்புரட்டி உதைத்தான். உதையுண்ட வீரன் எழுந்து நின்று சனங் களைப் பார்த்து, "ஆனால் என்ன, என் மீசையிலே மண்படவில்லை" என்று மீசையை முறுக்கினான்.

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பாலபாடம்**

*Is it asked 'What is truth?' It is the speaking of such words as are without the least degree of evil (to others).* *291*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகச் செழும்பாடல்கள் இறைவனை முன்னிலையில் முறையீடு செய்வன

**சிவ. சண்முகவடிவேல்**

மணிவாசகரும், மாணிக்கவாசகரும் ஒருவரே. அதேபோல மாணிக்கவாசகரும், திருவாதவூரரும் ஒருவரே. மணி மணியான வாசகங்களைத் தந்த வராதலின் மணிவாசகர் என்றும், மாணிக்கம் போன்ற வாசகங்களைத் தந்தவராதலின் மாணிக்க வாசகர் எனவும் கொள்ளலாம். மணிவாசகம், மாணிக்க வாசகம் என்று இரண்டாகப் பிரித்துப் பார்த்தாலும் வாசகம் ஒன்றுதான். அது மேலான செல்வம் பெற வழிவகுப்பது. ஆதலின் திரு என்னும் அடைமொழியுடன் வாசகம் இணைந்து திருவாசகம் என்றாயிற்று. திருவாதவூரடிகளால் அருளிச் செய்யப்பெற்ற மற்றும் ஒரு பனுவலான திருக்கோவையாரோடு மணிவாசகருடைய திருவாய்மொழி இரண்டு. திருவாசகம், திருக்கோவையார் சைவத்திருமுறையில் எட்டாவதாக இடம்பெற்றுள.

திருக்கோவையார் தமிழில் பேசப்படும் அகப்பொருள் இலக்கியமாக விளங்குவது. துறைக்கு ஒரு பாடலாக 400 துறைகளுக்கு 400 பாடல்களைக் கொண்டது.

திருவாசகம் 51 பிரிவுகளில் 658 திருப்பாடல்களைக் கொண்டது. அவற்றுள் முதல் நான்கும் அகவல்கள்; அவைகள் 95 முதல் 225 அடிகள் வரை அமைவன. சிவபுராணம், கீர்த்தித்திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல் என்னும் தலைப்புக்களில் அமையப் பெற்றன.

திருச்சதகம் 100 திருப்பாடல்களைக் கொண்டது. நீத்தல் விண்ணப்பம் 50 திருப்பாடல்களைக் கொண்டது. திருவெம்பாவை முதலாகத் திருவுந்தியார் வரையில் 7 திருப்பதிகங்கள் 20 செழும்பாடல்களைக் கொண்டவையாக விளங்குவன. ஏனைய திருப்பதிகங்கள் 2 முதல் 11 பாடல்களைக் கொண்டவையாக அமைந்துள்ளன.

ஏனைய திருமுறைகளுக்கு இல்லாத சில தனியான சிறப்புக்களைக் கொண்ட இயல்பு திருவாசகத்திற்கு உண்டு.

அவற்றுள் ஒரு சில இயல்புகள் பின்வருமாறு அமைகின்றன. திருக்கோவில் பெருவிழாவில் தீர்த்த உற்சவம் அருளலைக் குறிப்பது. தீர்த்தம் ஆடுவதற்கு முன்னர் சாத்தப்படுவது பொற்சுண்ணம். பொற்சுண்ணம் இடிக்கும் போது பாடும் சிறப்பைப் பெற்று விளங்குவது திருப்பொற்சுண்ணத் திருவாசகம். இறைவர் திருவூஞ்சல் ஆடுவதற்கு இசைவாக அமைவது திருவூஞ்சல் திருப்பதிகம், ஆதிரைச் சிறப்பு அலாதியானது. மார்கழித் **திருவாதிரைப்** பத்துத் தினங்களிலும் பாடும் உரிமைக்கு உரியனவாக உணர்த்தப்படுவது திருவெம்பாவை.

திருப்பள்ளி எழுச்சியின் போது இசைக்கத் தக்க தன்மையாக இருப்பது, திருப்பள்ளி எழுச்சித் திருவாசகம். இவ்வாறாகத் திருக்கோவில் சிவாகம க்கிரியைகளோடு பின்னிப் பிணைந்து நிற்கும் திருவாசகத் திருப்பதிகங்கள் அவை.

பெண்களுடைய திருத்தொண்டுகளோடு இணைந்தனவாகவும், அவர்கள் ஆடும் விளையாட்டுக்களிலும் சிவனை மறவாச் சிந்தையைப் பெருக்குவதாகவும் அமைவன. சில பதிகங்கள் திருஅம்மானை, திருவுந்தியார், திருச்சாழல், திருப்பூவல்லி, திருத்தோள்நோக்கம் போன்ற திருப்பதிகங்கள் அத்தகையன. ஏனைய திருமுறைகளில் பெண்களுடைய சிவ வழிபாட்டிற்கு முதன்மை கொடுத்து, அவர்களுடைய ஆடலிலும், பாடலிலும் சிவ உணர்வை ஊட்டும் தகையனவாகத் திகழும் திருப்பாடல்களைக் காண்டல் அரிது.

திருவாதவூரடிகளார் கிளியைக் கொண்டு சிவபெருமான் மேல் கீதம் பாடுவிப்பார்; குயிலைக் கொண்டு அவன் நாமம் கூவுவிப்பார்; தும்பீ மூலம் சிவபிரான் புகழைத் தோத்தரிப்பார். இவற்றால் ஏனைய பறவைகளின் ஒலிகள் எல்லாம்

---

**பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்.**

குற்றமற்ற நன்மையைப் பிறர்க்குத் தருமானால், பொய்யான சொற்களும், வாய்மை என்று கருதத்தக்க இடத்தைப் பெறுவனவாம். 292

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநாமங்களாக அமைய வேண்டும் என்பது அடிகளாருடைய வேணவா என்பது **போதகரும். அதன் பேறு உலகில்** எங்கிருந்து ஒலி வந்தாலும் அது மண்ணிலிருந்தும் வரலாம், மரத்திலிருந்தும் வரலாம், விண்ணிலிருந்தும் வரலாம். அந்த ஒலிகள் யாவும் சிவ நாம ஒலியாக வரவேண்டும் என்பது சொல்லாமல் விளங்கும். அதனையே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், "எல்லாம் அரன் நாமமே சூழ்க வையகம்" என்று அருளினார்.

இவ்வாறாகத் திருவாதவூரடிகள் பல்லாற்றானும், பரம்பொருளுடைய நாமம் கற்றார், இடும்பை களையவும் கேட்டார், கேடு அகலவும் வேண்டும் எனக் கருத்திற் கொண்டமையால்தான், "நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க, இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்ற எடுப்போடு திருவாசகம் பாடத் தொடங்குகின்றார். எங்கு எங்கு எல்லாம் சென்று எப்படி எப்படி எல்லாம் தேனாகத் திருவாசகத்தை அடிகளார் வாரி வழங்கினாலும் அவருடைய **உயிரின்** உட்கிடக்கை இறைவனை முன்னிலைப்படுத்தி மொழிவதாகும்.

அவருடைய இறை அனுபவம் எல்லாம் இறைவனை முன்னிலையில் காண்டலேயாகும்.

கண்ணிற்குப் புலனாகாக் கடவுளை, செவியினால் ஓர்க்கப்படாத கடவுளை, மனத்தினால் அளக்க ஒண்ணாதமாயனை, வாக்கிறந்த வள்ளலைத் தமக்கு முன்னிலைப்படுத்தி உரையாடி உறவாடினார் என்றால் அவர் அனுபவித்த இறை இன்பம் தான் என்னே!

எங்கும் பரிபூரணராக நீக்கமற நிறைந்தும், சச்சிதானந்தமாகியும், தான் ஒன்று அல்லாமல் தான் அன்றி ஒன்றும் இல்லாத எம்பிரானை தமது கண்முன்னே தருவித்து வார்த்தையுள் அகப்படுத்தி வாயாரப் பாடினார் என்றால் வாதவூரடிகள் பெற்ற இறை இன்பச் சுவையை யார்தான் உணரவல்லார்?

போற்றித் திருவகவலில் இறைவனை முன்னிலைப்படுத்தி மொழிகின்றார்.

"சாயா அன்பினை நாள்தொறும் தழைப்பவர், தாயே ஆகி வளர்த்தனை போற்றி.." என்று போற்றத் தொடங்குகின்றார்.

திருச்சதகத்தை, "மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன்விரையார் கழற்கு என் கைதான் தலை வைத்து" என்று எடுக்கின்றார். "உன் விரையார் கழற்கு..." என்பதனால் திருச்சதகப் பாடல்கள் அனைத்தையும் சிவபிரானை முன்னிலைப்படுத்தி மொழிந்த முறைப்பாடாகக் கொள்ளலாம்.

நீத்தல் விண்ணப்பப் பாடல்களும் திருஉத்தரகோச மங்கையில் எழுந்தருளி இருக்கும் எம் பெருமானை முன்னிலையாக்கிக் கொண்டு தமது குறைபாடுகளை எடுத்துரைத்த முறைப் பாடாகும்.

திருவெம்பாவை சத்தியை வியந்துரைப்பினும் தமிழ் உலகப் பெண்களுடைய உள்ளக் கிடக்கையைத் தம்மேல் ஏற்றித் தரணியில் முறையீடு செய்யும் தன்மையாக 9, 19, 20 போன்ற பாடல்கள் பொருள் சுமந்துள்ளன.

ஆனந்தக்களிப்புத் தரும் திரு அம்மானையில் தாம் பெற்ற இறை இன்ப அனுபவத்தைத் தோழியரோடு பகிர்ந்து கொள்ளும் பான்மையாக அமைந்துள்ளதைக் காணலாம்.

திருப்பள்ளி எழுச்சி, கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் திருப்பதிகம், செத்திலாப்பத்து, அடைக்கலப்பத்து, "ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே" என்னும் ஈற்றடியைக் கொண்டு விளங்கும், ஆசைப்பத்து, வாழாப்பத்து, "அதெந்துவே என்றருளாயே" என்று அறைகூவும் அருட்பத்து, திருக்கழுக்குன்றப்பதிகம், பிரார்த்தனைப் பத்து, குழைத்தபத்து, பிடித்தபத்து, திருஏசறவு போன்ற பதிகங்களெல்லாம் இறைவனை முன்னிலைப்படுத்தி மொழிந்த கூற்றுக்களாக அமைந்துள்ளன.

இவற்றின் உயிரோட்டமாக, வடித்து எடுத்த சாறாக ஓர் உண்மை நமக்கு மறைமுகமாக உணர்த்தப்படுகின்றது.

அதுதான் -

காணாக்கடவுளைக் காதலால் கண்டு திருவாதவூரடிகள் அவரோடு கதைத்தார்.

*Even falsehood has the nature of truth, if it confer a benefit that is free from fault.* **292**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்தம் பயில்வோம்

# சிவப்பிரகாசம்

மட்டுவில் ஆ. நடராசா

உற்றதொழில் நினைவுரையின் இருவினையும் உளவாம்
ஒன்றொன்றால் அழியாதூண் ஒழியா துன்னில்
மற்றவற்றின் ஒருவினைக்கோர் வினையால் வீடு
வைதிகசை வம்பகரும் மரபில் ஆற்றப்
பற்றியது கழியுமிது விலையால் ஏற்கும்
பான்மையுமாம் பண்ணாது பலிக்கும் முன்னம்
சொற்றருநூல் வழியின்வரின் மிகுதி சோரும்
சோராதங் கதுமேலைத் தொடர்ச்சி யாமே. 31

இ-ள்: இருவினையும் உற்ற தொழில் நினைவு உரையின் உளவாம் - நல்வினை தீவினை என்னும் இருவினைகளும் உடல் உளம் வாக்குகளோடு பொருந்துகின்ற தொழிலாலும் நினைவாலும் உரையாலும் உண்டாகும், ஒன்று ஒன்றால் அழியாது - ஒருவினையின் பயனால் மற்றைய வினைப்பயன் அழியாது, உன்னின் ஊண் ஒழியாது - ஆராய்ந்து பார்த்தால் வினைப்பயனை அனுபவித்தல் தப்பாது, மற்று - இம்முறைக்கு மாறாக, வைதிக சைவம் பகரும் மரபில் - வேதாகமங்கள் கூறும் முறையில், அவற்றின் ஒரு வினைக்கு ஓர் வினையால் வீடு ஆற்ற - அவ்விரு வினைகளில் ஒன்றாகிய தீவினையைப் பிராயச் சித்தத்தால் நீங்கச் செய்ய, பற்றியது கழியும் - தீவினையின் பயனாகப் பற்றிய பாவம் நீங்கும், இது - இவ்வாறு கழுவாய் செய்தல், விலையால் ஏற்கும் பான்மையுமாம் - தான் செய்யாது கூலி கொடுத்துச் செய்விக்கும் முறையிலும் அமையும், பண்ணாது பலிக்கும் - கழுவாய் செய்யாது அபுத்தி பூர்வமாகச் செய்யும் நல்வினையாலும் பாவநீக்கம் உண்டாகும், முன்னம் சொல் நூல் தரும் வழியின் வரின் மிகுதி சோரும் - முன்னர்ச் சொல்லப்பட்ட வேதாகமங்களிற் கூறப்படும் முறையில் ஒழுகிவரக் கழுவாய் செய்தலினாலும் அபுத்தி பூர்வமாகச் செய்த நல்வினையினாலும் நீங்காதெஞ்சி நின்ற பாவங்கள் நீங்கும், அங்கு சேராதது மேலைத் தொடர்ச்சியாம் - அவ்வாற்றான் நீங்கா தெஞ்சியவை மேல் வரும் பிறவிகளில் தொடர்ந்து அனுபவத்துக்கு வரும் எ-று.

ஒரு வினை - பாவம். ஓர் வினை - வைதிக வினை. இது பிராயச் சித்தத்தைக் குறிக்கின்றது.

வேதாகமங்களில் கிரியா காண்டத்திற் கூறிய வாறு பிராயச்சித்தம் செய்வதனாலும் ஞானகாண்டத்திற் கூறப்பட்டபடி சரியை, கிரியை, யோக நெறிகளில் நிற்பதனாலும் பாவங்கள் நீங்குமென்பது இவ்வாசிரியரின் கருத்து.

மோகமிக உயிர்கள்தொறும் உடனாய் நிற்கும்
மூலஆணவம் ஒன்று முயங்கி நின்று
பாகமிக உதவுதிரோ தாயி ஒன்று
பகர்மாயை ஒன்றுபடர் கன்மம் ஒன்று
தேகமுறு கரணமொடு புவன போகச்
செயலாரும் மாமாயைத் திரட்சி ஒன்றென்
றாகமலம் ஐந்தென்பர் ஐந்தும் மாறா
அருளென்ப தரிதென்பர் அறிந்து ளோரே. 32

இ-ள்: மோகம் மிக உயிர்கள் தொறும் உடனாய் நிற்கும் மூல ஆணவம் ஒன்று - மறைப்பு மிகும்படி உயிர்கள் தோறும் சகசமாய் நிற்கும் மூல மலமாகிய ஆணவ மலம் ஒன்று, முயங்கி நின்று பாகம் மிக உதவு திரோதாயி ஒன்று - ஆணவ மலத்தோடு கூடி நின்று மலபரிபாகத்தை உண்டாக்குகின்ற திரோதான சத்தி ஒன்று, பகர் மாயை ஒன்று - பிரபஞ்சத்துக்குக் காரணமென்று கூறப்படுகின்ற மாயா மலமொன்று, படர் கன்மம் ஒன்று - புண்ணிய பாவங்களாகவும் இன்ப துன்பங்களாகவும் பரந்து செல்கின்ற கன்ம மலம் ஒன்று. உறு தேகம் கரணமொடு புவன போக செயல் ஆரும் மாமாயைத் திரட்சி ஒன்று என்று - ஆன்மாக்களோடு பொருந்துகின்ற தனு

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.
ஒருவன் தன் நெஞ்சு அறிந்ததொன்றைப் பிறர் அறியவில்லை என்று கருதிப் பொய் சொல்லக்கூடாது. பொய் சொன்னால், அதனை அறிந்த தன் நெஞ்சே, தான் செய்த தீவினைக்குச் சான்றாய் நின்று, தன்னைக் குற்றஞ்சாட்டித் துன்புறுத்தும்.293

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கரண புவன போகங்களாகக் காரியப்படும் பெரிய மாயா காரியக் கூட்டமாகிய மாயேயம் ஒன்றென்று, ஆக மலம் ஐந்து என்பர் - எல்லாமாக மலம் ஐந்து என்பர், ஐந்தும் மாறாது அருள் என்பது அரிது என்பர் அறிந்துளோரே - இவ்வைந்து மலமும் நீங்காது அருள் பெறுதல் அரிதென்று அறிவுடையோர் கூறுவர் எ-று.

மாயை சூக்குமமாய் உயிரறிவோடு கூடி நின்று அதை மயக்கும். **மாயேயம்** மயக்க அறிவினாற் பற்றப்படும் பொருளாயிருக்கும்.

'அரிது' என்பது இவ்விடத்தில் இன்மைப் பொருளைத் தருகின்றது. 'மனக் கவலை மாற்றல் அரிது' என்பதில் வரும் 'அரிது' என்பதும் இம்மைப் பொருளையே தருதல் காண்க.

ஆணவ மலத்தின் வலியைக் கெடுத்தற் பொருட்டு, ஆன்மாக்களுக்குக் கருவி கரணங்களைக் கூட்டி, அவற்றை மயக்கிப் போகங்களை அனுபவிக்கச் செய்தலினால், திரோதான சத்தியை மலமென்று உபசாரமாகக் கூறுவர்.

## கேவலாவத்தை

**ஓங்கிவரும் பலஉயிர்கள் மூன்றவத்தை பற்றி**
**உற்றிடுங்கே வலசகல சுத்தமென உணர்க**
**ஈங்குவரும் கலாதியொடு குறிஉருவம் ஒன்றும்**
**இன்றிமலமன் றியொன்றுமில்லை யெனும் இயல்பாம்**
**ஆங்கறிவை அறிவரியன் அறிகருவி அணையா**
**ஆதலினால் இள்மருவும் அலர்விழிபோல் அதுவாய்**
**நீங்கும்வகை யின்றிநித்த வியாபகமாய் அங்கண்**
**நிற்பது கேவலமென்று நிகழ்த்தும் நூலே. 33**

இ-ள்: ஓங்கிவரும் பல உயிர்கள் மூன்று அவத்தை பற்றி உற்றிடும் - தம் நிலையில் உயர்ந்து வரும் பலவாகிய உயிர்கள் மூன்று அவத்தைகளைப் பற்றி நிற்கும், கேவல சகல சுத்தம் என உணர்க - அவ்வவத்தைகள் கேவலாவத்தை சகலாவத்தை சுத்தாவத்தை என அறிக, கேவலம் - அவற்றுட் கேவலாவத்தை, ஈங்கு வரும் கலாதியொடு குறி உருவம் ஒன்றும் இன்றி - இச்சகலாவத்தையில் உயிரைப் பொருந்துகின்ற கலை முதலிய தத்துவங்களோடு அடையாளம் உருவம் ஒன்றும் இன்றி, மலமன்றி ஒன்றும் இல்லை எனும் இயல்பாய் - ஆணவ மலமன்றி வேறொன்றும் இல்லையென்னும் இயல்பினை உடையதாய், அறிகருவி அணையா ஆதலினால் ஆங்கு அறிவை அறிவு அரியன் - அறிதற் கருவிகள் கூடாமையால் அவ்விடத்தில் அறியப்படும் பொருள்களை அறிதல் இன்றி, இருள் மருவும் அலர் விழிபோல் அதுவாய் - இருளோடு கூடிய திறந்தகண் இருளின் வண்ணமாய் இருப்பது போல ஆணவத்தின் வண்ணமாய், நீங்கும் வகை இன்றி - அதனை விட்டு நீங்குவதற்கு வழியின்றி, நித்த வியாபகமாய் - எப்பொழுதும் ஆணவத்தோடு சம வியாபகமுடையதாய், அங்கண் நிற்பது என்று நூல் நிகழ்த்தும் - அவ்விடத்தில் நிற்பதென்று ஆகமங்கள் சொல்லும் எ-று.

இங்கு கூறப்படும் கேவலம் காரண கேவலம் எனப்படும். இது மருட் கேவலம் என்றும் அனாதி கேவலம் என்றும் சொல்லப்படும். ஆன்மாவோடு கலை வித்தை அராகம் என்னும் தத்துவங்கள் கூடுதலால் அதன் கிரியை அறிவு இச்சை என்பன விளங்கும். கேவலத்தில் இத் தத்துவங்கள் ஆன்மாவைக் கூடாமையால் அதன் அறிவு இச்சை செயல்கள் விளங்கா.

குறி - காரண உடம்பு, உருவம் - தூலஉடம்பு.

'அறிவை அறிவரிதாய்' என்பதில் முதலில் வரும் 'அறிவு' ஆகுபெயர். அது அறியப்படும் பொருளைக் குறிக்கின்றது. சகலாவத்தையில் பிரபஞ்சமும் சுத்தாவத்தையிற் சிவமும் அறியப்படும் பொருள்களாகும்.

இவ்விடத்தில் 'அரிது' என்பது இன்மைப் பொருளைத் தருகின்றது.

இருளோடு கூடிய திறந்தகண், இருளின் வண்ணமாய் இருத்தலால், ஒன்றையும் அறியமாட்டாதது போல, ஆணவ இருளோடு கூடிய உயிர் அதன் வண்ணமாய் நிற்றலால் கேவலாவத்தையில் ஒன்றையும் அறியமாட்டாது.

'நித்த வியாபகமாய்' என்பதில் வரும் நித்தம் என்பதற்கு, பிறப்பிறப்பில்லாததாய் எனப் பொருள் கொள்வாரும் உண்டு.

கேவலத்தில் உயிர் மலத்தளவில் வியாபகமாயிருக்கும் இவ்வாறிருத்தலை 'வியாத்தி' என்பர். வியாத்தி - சமவியாபகம்.

*Let not a man knowingly tell a lie; for after he has told the lie, his mind will burn him (with the memory of his guilt).* *293*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவகைச் சமயம்

சைவசித்தாந்த கலாநிதி
க. கணேசலிங்கம்

அறுவகைச் சமயம் என்ற வழக்கு தமிழகத்தில் நீண்ட காலமாக நிலவுகிறது. அண்மைக் காலத்தில், சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகிய மதங்களை அறு சமயங்களாகச் சிலர் கொள்கின்றனர். இந்த வழக்கு தமிழகத்தில் இல்லாதது; சைவத் தமிழ் நூல்களில் காணமுடியாதது.

இது சைவத் தமிழர்களிடையே எப்படி வந்தது? இந்தப் பிரிவிலுள்ள சமயங்கள் இன்று உள்ளனவா? தமிழகத்து நூல்கள் அறுசமயம் என்று கூறும் பிரிவு என்ன? இவை பற்றிய சிந்தனை பயனுள்ளது.

## தமிழ் இலக்கியங்கள்

அறுசமயம், அறுவகைச் சமயம், இருமுச் சமயம், ஐவகைச் சமயம் என்று சமயங்கள் வகுத்துக் கூறப்படுவதைத் தமிழ் இலக்கியங்களில் காணலாம். இச்சொல்லாட்சிகள் சமண, பௌத்த நூல்களிலும் காணப்படுகின்றன.

உலோகாதயம், பௌத்தம், சாங்கியம், நையாமிகம், வைசேடிகம், மீமாஞ்சம் என ஆறு சமயங்கள் மணிமேகலையில் இடம்பெறுகின்றன. இதில் கடவுளர் பலரும் வெவ்வேறு அளவைகளும் கூறப்படுகின்றன. அளவை வாதம், பிரம வாதம், சைவ வாதம், வைணவ வாதம், வேத வாதம், ஆசீவக வாதம், நிகண்ட வாதம், சாங்கிய வாதம், வைசேடிக வாதம், பூத வாதம் என்று சமயக்கொள்கைகள் பல கூறப்படுகின்றன. இவற்றை ஆறாக வகுத்துச் சமயங்களும் அவற்றின் ஆசிரியர்களும் தரப்படுகின்றன.

"பாங்குறும் உலோகா யதமே பௌத்தம்
சாங்கியம் நையா பிகம்வை சேடிகம்
மீமாஞ் சம்ஆம் சமய ஆசிரியர்
தாம்பிர கற்பதி சினகின கபிலன்
அக்க பாதன் கணாதன் சைமினி...."

என்ற மணிமேகலைத் தொடர் இவற்றை விளக்குகிறது. இந்த அறுவகைச் சமயங்களில், பௌத்தம் பூதவாதத்தையும், நையாமிகம் சைவ வைணவ வாதங்களையும், மீமாஞ்சம் பிரம வேத வாதங்களையும் தம்முள் கொண்டுள்ளன என்று கருதப்படுவதுண்டு.

பௌத்தம் சார்ந்த நூலான மணிமேகலையில், பௌத்தம் தவிர்ந்த மற்றைய சமயங்கள் "ஐவகைச் சமயம்" எனக் குறிக்கப்படும் இடமுண்டு. இது போன்று சமயம் சார்ந்த பெருங்கதை அறுவகைச் சமயம் பற்றியும் கூறுகிறது. சமணம் தவிர்ந்த "ஐவகைச் சமயம்" பற்றியும் கூறுகிறது.

சைவசமயம் கொண்ட இறைவனின் எட்டு மூர்த்தங்கள் (அட்ட மூர்த்தங்கள்) பற்றியும் மணிமேகலை கூறுவது குறிப்பிடத்தக்கது.

"இருசுடரோடு இயமானன் ஐம்பூதம் என்று
எட்டு வகையும்...."

என்பது இது குறித்த தொடர்.

திவாகரம் என்ற ஒன்பதாம் நூற்றாண்டில் எழுந்த நூலில், மணிமேகலையில் கூறப்பட்ட ஆறு சமயங்களில் ஒன்றான சாங்கியத்திற்குப் பதிலாக ஆருகதம் (சமணம்) இடம்பெறுகிறது.

**உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்.**

ஒருவன் நெஞ்சாரப் பொய் சொல்லாது நடப்பானானால், அவன் உயர்ந்தோர் உள்ளத்திலெல்லாம் உள்ளவனாவான். 294

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின் மூன்று நூற்றாண்டுகள் கழித்து வந்த பிங்கலந்தையில் புறச்சமயங்கள் ஆறு, அகச் சமயங்கள் ஆறு என்ற வகுப்புமுறை காணப்படு கின்றது.

## திருமுறைகளில்

மணிமேகலை மூன்றாம் நூற்றாண்டிற்கும் ஐந்தாம் நூற்றாண்டிற்கும் இடையில் வந்ததென்பது பலரின் கருத்து. சைவத் திருமுறைகளில் ஒன்றான திருமந்திரம் இந்தக் காலத்தில் அல்லது சிறிது முன்னர் பின்னராக எழுந்த தென்பதும் அறிஞர் கருத்து. சமயங்களை ஆறாறாகப் பிரித்து அகச்சம யம், புறச்சமயம் என்று வகைப்படுத்தும் வழக்கு மணிமேகலை காலத்திற்கு முன்னரே தோன்றிவிட் டதைத் திருமந்திரம் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. அதிலுள்ள "புறச்சமய தூஷணம்" என்ற தலைப்பிலுள்ள பாடல்களும் (1530-1549), "உட்சமயம்" என்ற தலைப்பிலுள்ள பாடல்களும் (1557-1572) புறச்சமயங்கள் ஆறு, அகச் சமயங்கள் ஆறு என்ற கருத்தைத் தருகின்றன. "இருமுச் சமயம்" என்ற சொல்லாட்சியும் திருமந்திரத்தில் வருகிறது. ஆயினும் இப்பாடல்கள் மூலம் வெவ் வேறு சமயங்கள் பற்றிய விரிவான விளக்கத்தைக் காணமுடியாதிருக்கிறது.

தேவார திருவாசக நூல்களிலும் அறுவகைச் சமயம் பேசப்படுகிறது. "ஆறு ஒன்றிய சமயங்க ளின்", "ஆறு சமயத்து", "அறிவினால் மிக்க அறு வகைச் சமயம்", "இருமுச்சமயம்" என்ற தொடர் களை இவற்றில் காணலாம். திருமுறைகளில் இத்தகைய தொடர்கள் அகச்சமயங்களைக் குறிப் பதாக, பொதுவாக, உரை ஆசிரியர்கள் எழுது கின்றனர். ஆயினும் அகச்சமயமல்லாத உலகாய தம், பௌத்தம், சமணம் போன்ற பதங்களும் திருமுறைகளில் வருகின்றன. ஆகையால் அறுசம யம் என்ற வழக்கு, திருமுறைகளில் இடத்துக்கேற் றவாறு பொருள்தருவதாகக் கருதவேண்டியுள்ளது.

## மெய்கண்ட நூல்களில்

அறுவகைச் சமயங்கள் குறித்த செய்திகள், மெய்கண்ட சாத்திர நூல்களில், மற்றைய நூல் களை விட, விரிவாகத் தரப்பட்டுள்ளன. சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், சங்கற்ப நிராகரணம் போன்ற நூல்கள் அறுவகைச் சமயங்களைக் குறிப்பிடுகின்றன. சைவம் உள்ளிட்ட ஆறு சமயங்களை "மெய்தரு சைவமாதி இரு மூன்று" என்று கூறி சிவஞான சித்தியார் குறிக்கிறது. ஆனால், வேறு இடத்தில் "அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய்" என்று கூறும் பொழுது, அவை எந்தச் சமயங்கள் என்ற தெளி வில்லை. இது போன்ற நிலையைப் பிற மெய்கண்ட நூல்களிலும் காணலாம். ஆயினும் அகச்சமயம், புறச்சமயம் என்ற தொகுதிகளும், ஒவ்வொரு தொகுதிகளும் ஆறு சமயங்களைக் கொண்டதா னதும் பல ஆண்டுகளாக வழக்கில் இருந்தது என்பதை அறியமுடிகிறது. இப்பிரிவுகளில் உள்ள சமயங்கள் சில காலத்துக்குக்காலம் வேறுபட்டுள் ளதாயும் காணமுடிகிறது.

பதினைந்தாம் நூற்றாண்டில் எழுந்த 'தத்துவப் பிரகாசம்' சைவம் உள்ளிட்ட ஆறு சமயங்களை உட்சமயமாக (அகச்சமயமாக)க் கொள்கிறது. ஐம்பத்தாறு சமயங்களை நிராகரிக்கிறது. இவற்றில் இருபத்து நான்கு புறச்சமயங்களாகக் கொள்ளப் படுகின்றன. அவை வேதாகமங்களை ஏற்காதவை.

அகச்சமயம், புறச்சமயம் எனப் பகுக்கப்பட்ட இருபிரிவுகள், பின்னர் நான்கு பிரிவுகளாக விதந் தன. ஒவ்வொன்றும் ஆறு சமயங்களைக் கொண்ட இப்பிரிவுகள், அகச்சமயம், அகப் புறச்சமயம், புறச்சமயம், புறப்புறச் சமயம் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. பதினெட்டாம் நூற்றாண்டில் செய்யப்பட்ட சிவஞானமுனிவரின் 'சிவஞானமா பாடியம்' நூலில் இவற்றின் விரிவைக் காணலாம்.

*He, who in his conduct preserves a mind free from deceit, will dwell in the minds of all men.* 294

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சண்மதம்

மேற்கூறப்பட்டவற்றிலிருந்து, காணபத்தியம், கௌமாரம், சௌரம், சைவம், வைணவம், சாக்தம் ஆகிய மதங்களை அறுவகைச் சமயம் என்று கொள்ளும் வழக்கு தமிழகத்தில் இருந்ததில்லை; அது சைவத்தில் இல்லாதது, என்பது பெறப்படும். அங்ஙனமாயின், இந்த வகைச் சமயப் பிரிவு தமிழகத்தில் எவ்வாறு வந்ததென்ற கேள்வி எழுகிறது.

சட்தரிசனம், சண்மதம் போன்ற சொல்லாட்சிகள் இந்திய சமய தத்துவங்களில் காணக் கூடியன. இவை முறையே ஆறு தத்துவங்கள், ஆறு மதங்கள் எனப்பொருள்படும். (சண் - ஆறு; தரிசனம் - தத்துவம்).

இந்திய நாட்டின் பழம்பெரும் தத்துவங்களாக ஆறினைக் குறிப்பிடுவதுண்டு. அவை, நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், பூர்வமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை என்பன. இவை வேதத்தை ஏற்பன. இதனால் இவை "ஆஸ்திக தரிசனம்" என்றும் அழைக்கப்படும். சைவசித்தாந்தம் என்னும் சைவசமய தத்துவம் வேதத்தைப் பொது வகையாலும் ஆகமத்தைச் சிறப்பு வகையாலும் ஏற்பது. சமண, பௌத்த தத்துவங்கள் இவற்றை ஏற்காதவை.

மேற்கூறப்பட்ட ஆறு ஆஸ்திக தரிசனம் போல், காணபத்தியம் முதலான ஆறு மதங்களை சண்மதங்கள் என்று குறிப்பிடுவதுண்டு. இது பற்றிய வரலாறு ஆராயப்பட வேண்டியது; வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

இவற்றுள் சௌரம் என்பது சூரிய வழிபாட்டைக் கொண்டது. ஞாயிறு வழிபாடு தமிழகத்தில் முன்பு இருந்ததென்பதைச் சிலப்பதிகாரம் போன்ற நூல்கள் வாயிலாக ஊகிக்கலாம். சைவநெறியிலும் சூரிய வழிபாடு இடம்பெறுகிறது. பரம்பொருளைச் சூரிய சந்திர வடிவில் கண்டு வழிபடுவது சைவ ஆகமங்களில் காணக்கூடியது. ஆயினும் சூரியனை முழுமுதல் தெய்வமாகக் கொண்டு வழிபடும் சமயம் தமிழகத்தில் இல்லை.

காணபத்தியம் கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம். இச்சமயம் தமிழகத்திலும் இல்லை, வேறிடங்களிலும் இன்றில்லை. சைவ வழிபாட்டில் கணபதிக்கு முக்கிய இடமுண்டு.

குமரக்கடவுளைத் தெய்வமாகக் கொண்டது கௌமாரம். குறிஞ்சி நிலத் தெய்வமாக பழந்தமிழ் நூல்களில் பெறப்பட்ட இறைவன் முருகன். குமார தந்திரம் என்ற ஆகமமும் உண்டு. ஆயினும் கௌமாரம் என்ற மதம் தமிழ்நாட்டில் இருந்ததாகச் சான்றில்லை. அப்படி இருந்திருப்பின் அது சைவத்தில் இணைந்திருக்கலாம் என்பது அறிஞர் கருத்து.

வைணவமதம் தமிழ்நாட்டில் உள்ள பழம் பெருஞ் சமயம் சைவத்தைப்போல், வைணவமும் தனியான ஆகமத்தைக் கொண்டது. சைவர்களின் ஆத்மார்த்த பூசையில் விஷ்ணுவுக்கு இடமுண்டு. வைணவம் சைவத்திலிருந்து தோன்றியது என்பது சைவ அறிஞரின் கருத்து.

சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டது சாக்தம். இது இந்தியாவில் வங்காள நாட்டில் உள்ள மதம். சிவனின் பிரிவிலாக் கூறாகச் சக்தியைக் கொள்வது தமிழகத்து மரபு. சத்தி வழி பாடு சிவ வழிபாட்டுடன் இணைந்து சைவ சமய மாகத் தமிழகத்திலே நிலவுகிறது; அது ஒரு தனிச்சமயமாக இல்லை.

ஆகவே மேற்கூறப்பட்ட சமயங்களில், சைவம், வைணவம் தவிர்ந்த சமயங்கள் தமிழகத்தில் இல்லாதவை; சைவ மக்களுக்கு அன்னிய மானவை.

**மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானஞ்செய் வாரின் தலை.**

ஒருவன் தன் உள்ளத்தோடு பொருந்த உண்மையைச் சொல்வானானால், அவன் தவமும் தானமும் ஒருங்கே செய்பவரைவிடச் சிறந்தவனாவான். 295

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய வரவு

சைவ மக்கள் மத்தியில், சைவத்துக்கு உடன்பாடற்ற கருத்துக்களும் வழிபாடுகளும் அண்மைக்காலத்தில் புகுத்தப்படுகின்றன. ஐயப்ப வழிபாடு, ஆஞ்சநேய வழிபாடு போன்றவை அண்மையில் வந்தவை. பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய தெய்வங்களை மும்மூர்த்திகள் என்று கூறிச் சமநிலையில் வைத்துப் போற்றுவது சைவத்தில் இல்லாதது; இந்து சமயம் என்ற பெயரில் வைதீக மார்க்கத்தினரால் புகுத்தப்பட்டது. இப்படி வந்து புகுந்த பலவற்றில் அறுசமயம் என்று இன்று சிலர் கூறும் சமயத்தொகுதியும் (காணபத்தியம் முதலியனவையும்) ஒன்று.

இந்த ஆறு சமயங்களையும் தோற்றுவித்தவர் சங்கரர் என்று வைதீக மதத்தினர் சிலர் கூறுவதுண்டு. இது உண்மைக்குப் புறம்பானது. "நான் கடவுளாக இருக்கிறேன்" (அகம் பிரமாணம்) என்றும், மெய்ப்பொருள் காண்பதற்கு ஞானம், ஒன்றே வழி, கிரியை தேவையற்றது, பக்தி தேவையற்றது என்றும் நம்பிய சங்கரரின் சீடர்கள் கடவுள் வழிபாட்டில் ஈடுபாடின்றி வழிமாறிச் சென்றனர். திசை திரும்பும் அவர்களைத் தடுத்து நிறுத்தி, கடவுள் வழிபாட்டில் ஈடுபடச் செய்வதற்காக ஒரு சமய நெறியை வகுக்கவேண்டிய கட்டாயம் சங்கரருக்கு ஏற்பட்டது. இந்தியாவில் அன்று இருந்த ஆறு சமயங்களைக் கூறி, அவற்றில் ஒன்றைப் பின்பற்றுமாறு அவர் தமது சீடருக்கு அறிவுறுத்தினார். எனவே அவரே இச்சமயங்களைத் தோற்றுவிக்கவில்லை என்பது கருதற்பாலது. இது அறிஞரின் கருத்தாக நூல்களில் காணக்கூடியது.

தமிழகத்திலும், இந்தியாவிலும், தமிழர் வாழும் பிறநாடுகளிலும், பெரும்பாலானவர் கொள்ளும் சமயம் சைவம். வேத, உபநிடதங்கள், ஆகமங்கள், பக்தி இலக்கியங்கள், தத்துவ நூல்கள் ஆகிய பல சைவத்தில் உண்டு.

காணபத்தியம் போன்றவற்றைக் கொண்ட அறுவகைச் சமயம் சைவ நூல்களிலும், தமிழ் நூல்களிலும் இடம்பெறவில்லை. அவை கூறும் அறுவகைச் சமயங்கள் இவற்றுக்கு வேறானவை. இதனை அறியாமல், எவரோ சொல்வதைக்கேட்டு, சைவர்கள் அறுசமயம் என இவை பற்றிப் பேசி மகிழ்வது வருத்தமளிப்பது.

**********

ஒரு மனிதன் ஒரு மகாராசனைப் பார்த்து "நீர் எனக்கு ஆறுமாசம் நல்ல போசனம் தருவீராகில் பின் ஒரு பெரிய மலையை எடுப்பேன்" என்றான். அவன் இவனுக்கு அப்படியே நல்ல ஆகாரம் கொடுத்தான். பின் மலைக்குச் சமீபத்திலே அழைத்துக் கொண்டுபோய் இதை எடு" என்றான். அவன் "நீங்கள் எல்லாரும் எடுத்து என் தலைமேலே வைத்தால் எடுக்கிறேன்" என்று சொன்னான்.

செலவுகாரனாகிய ஒரு உத்தியோகஸ்தன் ஒரு செல்வனைக் கடன் கேட்டான். "திரும்ப நீ எப்படிக் கடன் தீர்ப்பாய்" என்றான். "என் சம்பளத்திலே மாசந்தோறும் சேர்த்துத் தருவேன்" என்றான். "இதற்கு முன்னே தானே நீ இப்படிச் சேர்த்துக் கொள்ளலாகாதா" என்றான். "ஆனால் நான் தெரிவிக்கின்றேன்: எப்படியெனில் கடன் தரமாட்டேன்: போ" என்றான். பின் பணஞ்சேர்க்கத் தொடங்கினான்.

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பாலபாடம்**

*He, who speaks truth with his heart, is superior to those who make gifts and practise austerities.* **295**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீழ்க்கணக்கு

முருகவே பரமநாதன்

**"எண்ணும் எழுத்தும் கண்எனத் தகும்."**
**"எண் எழுத்து இகழேல்."** - ஔவையார்.

**"எண் என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டுங் கண்ணென்ப வாழும் உயிர்க்கு."**
- திருக்குறள் 392

**"எண்ணும் எழுத்தும் சொல்லானாய் போற்றி"**
- அப்பர் தேவாரம்

எண் என்பது கணக்கைக் குறிக்கிறது. கணக்குப் பிறந்த இடம் அரேபியா என்பர். இன்று எண்பாடம் பல பிரிவுகளைக் கொண்டது. எண் கணிதத்தில் இருந்து வர்த்தக கணிதம் வரை - கணித பாடம் பலவகையானது. விஞ்ஞானப் பாகுபாடு கணக்கை மையமாகக் கொண்டது. விண்ணியற் கணிப்புக்கு இவ் அளவுகோல் முக்கியமானது. பழைய காலத்தில் ஆசிரியர் கணக்காயர் என அழைக்கப்பட்டார். புலவரையும் கணக்காயர் என்று கூப்பிட்டனர். உ+ம்: மதுரைக் கணக்காயனார் மகன். தமிழ் வரிவடிவம் முழுமையையும் தமிழ் நெடுங்கணக்கு என்று இலக்கண நூலார் குறிப்பிடுவர். இறைவன் திருப்பாதங்களைக் கணக்கு வழக்கு அற்ற அடியென அப்பர் பெருமான் அழைக்கின்றார். கணக்கு இல்லாவிடில் உலகம் இருண்டு போகும். எம் நாளாந்த வாழ்க்கைக்கு வரவு செலவுக் கணக்கு இன்றி அமையாதது. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு என்பர். கணக்கு விற்பன்னர்கள் புகழ் பூத்தவர்கள். கணக்காளர்க்கு உயர்ந்த மதிப்பு உண்டு. இலக்கியங்களில் காலக்கணக்கர், சமயக் கணக்கர் பற்றிப் பேசப்படுகிறது. கணக்கு, அறிவையும் சிந்தனையையும் விவேகம், ஆற்றல் என்பவற்றையும் வளர்க்கும் ஒரு நுட்ப இயல் ஆகும். வானசாத்திரத்தின் நுண்ணிய கணிப்புக்குக் கணக்கு மிகமிக முக்கியமானது. பஞ்சாங்கமே கணக்கை மையமாகக் கொண்டது. திருக்கணித பஞ்சாங்கம் இதற்குச் சான்று. நுண்ணளவுகளைக் கூடக் கணிதம் வகுத்து, பகுத்துக் காட்டும். வாய்பாட்டாக்கம் வந்ததும் கணிப்பை, கணக்கை இலகுவாக்கவே. கைக்கல்குலேற்றர் நான்கு வகைக் கணக்கையும் இலகுவாக்கும். எனவே கணக்கு வாழ்வின் பெருக்காடி, நுணுக்காடி எனலாம். புதிய கண்டுபிடிப்புக்குக் கைகொடுப்பதும் கணக்கே. வாழ்க்கைக்குக் கணக்கு வழக்கு முக்கியம். வர்த்தகர்கள் கணக்கப்பிள்ளையின் உதவிகொண்டு, வரவு செலவைக் கணக்கிட்டு ஐந்தொகை மூலம் நிகர இலாபங்களையும், அசல் இலாபங்களையும் கணிப்பர். இன்று எண் கணக்கைச் சோதிடமாக்கி இறைவன் திருநாமங் களையே மட்டம் தட்டிவிடுகிறார்கள் சோதிடர். எண்ணின் பெறுமானம் பற்றிச் சொன்னவர்கள் கணித மேதைகள். அவர்களில் இராமானுசமும் ஒருவர்.

இக்கணக்குத் தொகையை அடிப்படையில் வைத்துத் தமிழ் இலக்கியங்களை வகுத்தனர். அவையே மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என வழங்கப்படுகிறது. தமிழ் இலக்கிய முனைவர்கள் வரலாற்றை ஆய்ந்து சங்ககாலம், சங்கமருவிய காலம், சோழர் காலம், பாண்டியர் காலம், பல்லவர் காலம், நாயக்கர் காலம், ஆங்கிலேயர் காலம் எனப் பிரித்து வரலாறு எழுதினார்கள். இவற்றில் முன்னமைந்த சங்ககால இலக்கியங் களை மேற்கணக்கு, கீழ்க்கணக்கு எனப்பகுத் தார்கள். மேற்கணக்கில் பதினெட்டு நூல்கள், கீழ்க்கணக்கிலும் பதினெட்டு நூல்கள். மேற்கணக் கில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என இருபகு திகள். தொகுக்கப்படுவது தொகை, வகுக்கப் படுவது வகை. சுந்தரர் தந்த திருத்தொண்டர்

**பொய்யாமை அன்ன புகழில்லை; எய்யாமை**
**எல்லா அறமும் தரும்.**

பொய் இல்லாது வாழ்தலை விட ஒருவனுக்குப் புகழ் ஏதும் இல்லை. அ..து அவன் முயற்சி செய்யாமலேயே எல்லா நன்மைகளையும் கொடுக்கும். 296

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகைதான் பெரியபுராணம் எழுதுதற்குக் கை கொடுத்தது. இவ்வரிசையிற் பத்துப் பாட்டு எவை? எட்டுத் தொகை எவையெனக் காண்போம்.

**முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய**
**கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து.**

***பத்துப்பாட்டு:-*** திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற் றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம்.

**நற்றிணை, நல்லகுறுந் தொகை ஐங்குறுநூறு**
**ஒத்தபதிற்றுப் பத்தோங்கு பரிபாடல்**
**கற்றறிந்தா ரேத்தும் கலியோ டகம்புறமென்**
**றித்திறத்த எட்டுத் தொகை.**

**எட்டுத்தொகை:-** நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித் தொகை, அகநானூறு, புறநானூறு.

**பதினெண்கீழ்க்கணக்கு:-** நாலடியார், நான் மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற் பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, ஓலாதி, சிறுபஞ்சமூலம், கைந்நிலை,...........

மேல்+கணக்கு = மேற்கணக்கு,
கீழ்+கணக்கு = கீழ்க்கணக்கு

இவை சிறப்பாக மனிதவிழுமியங்கள், பண்பாடு, நாகரிகம், வாழ்வியல், இறை அன்பு, இயற்கை போன்ற பல மேலாம் இலட்சியம் பேசும் இலக்கியங் களாயமைந்து மக்களை வழிப்படுத்துகின்றன.

இந்நெறியிலே - மக்களைப் பக்திபூர்வமாகச் செந்நெறிப்படுத்தி வையத்துள் வாழ்வாங்கு வாழும் வகை காட்டியவை பக்தி இலக்கியங்கள். பக்தி இலக்கியத்திற் சிறந்த மொழி தமிழ் என்பர். சைவத்திற் பன்னிரு திருமுறைகளும், வைண வத்தில் நாலாயிர திவ்வியப்பிரபந்தம், அஷ்டப் பிரபந்தம், தேசிகர்பிரபந்தம் என்பனவும் பக்தி பொழியும் அருளிச் செயல்களாகும். இப்பக்திப் பனுவல்களில் ஒன்றான திருநாவுக்கரசர் தந்த தேவாரத்தைப் பக்திபூர்வமாகப் படித்தபோது 'கீழ்க்கணக்கு' என்ற தொடர் அமைந்த பின்வரும் பாடல் ஆழமாகச் சிந்திக்க வைத்தது. இவற்றிலே ஆழுங்காற் படுபவர் எவரையும் இப்பாடல் தட்டி யெழுப்பாமல் இருக்கமுடியாது.

**தொழுது தூமலர் தூவித் துதித்துநின்**
**றழுது காமுற்ற றரற்றுகின் றாரையும்**
**பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்**
**எழுதுங் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே.**

- திருமுறை 5:21-8

**தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று**
**அழுது காமுற்று அரற்றுகின்றார் ஐயும்**
**பொழுது போக்கிப் புறக்கணிப்பார் ஐயும்**
**எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே.**

இத்திருப்பாட்டின் மேல் இரு அடிகளின் பொருளையும், கீழ் இரு அடிகளின் பொருளையும் கவனிக்க வேண்டும். இறைவனை ஆராத அன் போடு வணங்கி, பூவினாற் பூசைசெய்து பூஜித்து, பற்றுதலோடு அழுது புலம்பினர் மேலானவர். இறை நினைப்பு இல்லாமல் உண்டு, உடுத்து, வீணே காலத்தைப் போக்குவோர் கீழானவர். இவர்கள் பற்றிய புள்ளி விபரத்தை இறைவன் தன் ஏட்டில் எழுதி வைப்பான். இதுவே இறைதீட்டும் கீழ்க்கணக்கு. நல்லதைச் செய்பவர் நன்மை அடைவர். தீமை செய்பவர் துன்பம் அடைவர். ஆதலினால் நாம் இறக்கும்போது எதை எடுத்துச் செல்வோம்? நாம் செய்கின்ற புண்ணிய பாவங்களே எம்முடன் வரும். வேறு எந்தப் பொருளும் எம் மோடு தொடரா. போன பிறவியிலே செய்பவை இப்பிறவியிலும், இப் பிறவியிற் செய்பவை அடுத்த பிறவியிலும் வந்து சேரும். நீர் வழிப்படும் புணையது போல வினை வழிப்படும் ஆருயிர் என்பது சங்க இலக்கியம் தரும் உண்மை. பிறவி தோறும் எம்மைத் தொடர்வது இருவினைப் புண்ணிய பாவங்களே என்பது சைவசித்தாந்தம். நன்மை செய்தவர் நன்மையடைவர். தீமை செய் தவர் துன்பமடைவர். வினை விதைத்தவன் வினையறுப்பான். தினை விதைத்தவன் தினைய றுப்பான். பாகல் போட, சுரை முளைக்காது.

*There is no praise like the praise of never uttering a falsehood without giving any suffering; it will lead to every virtue.* ***296***

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவரவர் வினைவழி அவரவர் வந்தனர், அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்.

**அத்தமும் வாழ்வும் அகத்துமட் டேவிழியம் பொழுக
மைத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு
கைத்தல மேல்வைத் தழுமைந் தருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடருமி ருவினைப் புண்ணிய பாவங்களே.**
- பட்டினத்தடிகள்.

செல்வமும், அதனாலுண்டாகும் வாழ்வும் வீட்டின் அளவிலேயே நின்றுவிடும். மிகுதியாகச் சுற்றியிருந்த மனைவி முதலிய பெண்களும் கண்ணிலே கண்ணீர் வடிய தெரு அளவிலேயே நின்றுவிடுவார்கள். இருகைகளையும் தலைமேல் வைத்துத் தேம்பியழும் பிள்ளைகளும் சுடலை யளவிலேயே நின்றுவிடுவார்கள். அவரவர் செய்த புண்ணியம், பாவம் என்கின்ற இருவினைகளும் தான் ஒருவர் இறக்கும்போது பின்தொடரும் என்கிறார் பட்டினத்தார். இவைகள் நமது வரவு ஏட்டில் எழுதப்படும். இதனாலேதான் வள்ளுவர்

**"இருள்சேர் இருவினையுஞ்சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.** - குறள் 5

என்று பேசுகின்றார். இதற்கு உரை சொன்ன பரிமேலழகர் இறைமைக்குணங்கள் இவராயினாரை உடையரெனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள்சேராவாகலின், அவை முற்றறி வும் உடைய இறைவன் புகழே 'பொருள் சேர் புகழ்' எனப்பட்டது என்று விளக்கம் தருகிறார். பொருள்சேர் புகழ் - பொய்ம்மை சேர்ந்த புகழ், புரிதல் - எப்பொழுதுஞ் சொல்லுதல். எனவே நாம் போகின்ற வழிக்குத் துணையாய் இருப்பது இறைவனது திருவடிகளேயாகும். எனவேயதைப் பற்றிப் பிடிக்கவேண்டும் என்கிறது தேவாரம்.

**நம்பொருள் நம்மக்களென்று நச்சியிச்சை செய்துநீர்
அம்பர மடைந்துசால அல்லலுய்ப்ப தன்முனம்
உம்பர்நாத வைத்தம னொளிமிகுத்த செஞ்சடை
நம்பன்மேவு நன்னகர் நலங்கொள் காழிசேர்மினே.**
- திருமுறை 2:97-1

எனவே நாம் இறைவன் கணக்குக்குத் தப்பி வாழவேண்டும். நன்மை செய்யப் பிறந்த நாம் நன்மை செய்யாவிடின், தீமையாவது செய்யாது இருக்கவேண்டும். இப்படித் தீமை செய்தவர்கள் நரகிலே சென்று இரும்பினாலே செய்து சூடேற்றிய பாவையைக் கட்டிப்பிடிக்கும் தண்டனைக்குள் ளாவார்கள் என ஆழ்வார்கள் பாடியுள்ளனர்.

சைவம் மட்டுமன்றி வேறு சமயங்களும் வினையையும், வினையால் வருபிறவியையும், வினைக்கேற்ற அனுபவிப்புகளையும் ஏற்றுக் கொண்டன. எனவே நாம் அனுபவிக்க வேண்டிய வினைப்பயனுக்கு ஏற்ப இயமனும், இயமதூதரும் அளிக்கும் தண்டனையினின்றும் விடுபடவேண்டு மாயின் தில்லையில் நட்டஞ் செய்யும் கூத்தப் பிரானது திருப்பாதங்களைத் தினமும் பற்றிப் பிடித்தால் - அவன் தடுத்தாட்கொள்வான் எனச் சுந்தரர் நம்மை வழிப்படுத்துகிறார்.

**கல்தானுங் குழையுமா றன்றியே கருதுமா கரதகிற்றார்க்(கு)
எற்றாலுங் குறைவில்லை யென்பர்காண் உள்ளமே நம்மை நாளுஞ்
செற்றாட்டித் தருமனார் தமர்செக்கிலிடும்போது தடுத்தாட்கொள்வான்
பெற்றேறிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே.**
- திருமுறை 7:90-8

எள்ளைப் போட்டுச் செக்கிலாட்டுவர். எண் ணெய் வரும். கரும்பைச் செக்கிலிட்டுச் சாறெ டுப்பர். இஃதே போலும் தர்மதூதர் செக்கிலிட்டு ஆட்டும்போது எவ்வித துன்பம் அனுபவிக்க வேண்டிவரும் என்பது வெளிப்படை. அதேவேளை போலி வேஷம் போட்டவர்களையும் உண்மையான பக்தர்களையும் இறைவன் அறிவான் எனவும் அப்பர் பெருமானும் எழுதத் தவறவில்லை.

**நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே.**
- திருமுறை 5:90-9

பொக்கம் - பொய், நாணி - வெட்கப்பட்டு

எனவே நாம் இறைவனுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும் என்பதை உணர்ந்து நம்மை நீதி வழுவா நெறிமுறையில் இட்டுச் செல்வோமாக.

**மனத்துக் கண்மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீரபிற.** - குறள் 34

தூய்மனத் தொண்டராய் வாழ்வோமாக. அப்போ கீழ்க்கணக்கில் அகப்பட்டுத் துன்பப்படமாட்டோம்.

**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.**
ஒருவன் பொய்யாமையாகிய அறத்தை (விடாமல்) தொடர்ந்து செய்யவல்லவனாயின், அவன் பிற அறங்களைச் செய்யாதிருத்தலே நல்லதாம். 297

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி

திருமுருக கிருபானந்தவாரியார்

வீடு என்ற சொல் விடு என்ற முதனிலை நீண்ட தொழிற் பெயர். மழை, பனி, காற்று, குளிர் முதலிய துன்பங்களினின்றும் விடுபடச் செய்வது வீடு.

வீடுகள் பல சேர்ந்தது வீதி; வீதிகள் பல சேர்ந்தது ஊர்; ஊர்கள் பல சேர்ந்தது நாடு.

ஊர்களில் வீதியிருந்தால் பெருமை ஏற்படாது. நீதியிருக்கவேண்டும். நீதியமைந்த வீதியே நாட்டுக்கு நலத்தை நல்கும்.

முற்காலத்தில், மன்னர்கள் தங்களின் முதற் கடமை, அறம் - நீதி இவைகளை மக்களிடைப் பரப்புவதேயாகும் என்று கருதியிருந்தார்கள்.

**"நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே"**

என்று புறநானூறு புகல்கின்றது.

இப்போது முடியாட்சியில்லை; குடியாட்சி. ஒவ்வொரு ஊரிலும் பஞ்சாயத்து மன்றத்தின் மூலமே நீதி வழங்கப் பெறுகின்றது. நீதி வழங்கும் பஞ்சாயத்து மன்றம் மிக்க ஆற்றல் உடையது. சிறந்த கட்டுப்பாடும் உடையது. நல்ல பணி நாட்டுக்கு ஆற்றுதல் வேண்டும்.

சிறந்த நீதி எது தெரியுமா?

தனக்கு எது துன்பம் என்று தோன்றுகின்றதோ, அதனைப் பிறருக்குச் செய்யக் கூடாது. தனக்கு எது இன்பமோ அதனைப் பிறருக்குப் புரிதல் வேண்டும்.

தன்னை யாராவது நிந்தித்தால் மனம் வருந்துகின்றது. ஆதலால் பிறரை நிந்திக்கக் கூடாது. நம் பொருளை யாராவது கவர்ந்தால் துன்பப்படுகின்றோம். நாம் பிறர் பொருளைக் கவரக்கூடாது. நமது மனைவியை ஒருவன் விரும்பிப் பார்த்தால் உள்ளம் கொதிக்கின்றது. பிறர் மனைவியை மனத்தாலும் விரும்பக்கூடாது. நம் காலில் முள் குத்தினாலும் வலிக்கின்றது; பிற உயிரைக் கொல்லுதல் கூடாது.

எனவே, பஞ்சாயத்து மன்றங்கள், தக்க விரிவுரையாளர் மூலமாகவும், துண்டுத் தாள்கள் மூலமாகவும், மக்களிடையே நீதி நெறியைப் பரப்ப வேண்டும்.

உலகமெல்லாம் நீதி வெள்ளம் ஓடவேண்டும். அதன் மூலம் உயிராகிய பயிர் தழைக்கவேண்டும்.

இளைஞர்களை நல்வழிப்படுத்த வேண்டும். இளைஞர் உள்ளம் பண்பட வேண்டும்.

கல்வியின் பயன் அறிவு. அறிவின் பயன் பண்பு. பண்பு இல்லாத அறிவினால் பயன் இல்லை. பண்பு இல்லாதவன் எத்துணைச் சிறந்த கூரிய அறிவு பெற்றிருப்பினும், அவன் மரத்துக்குச் சமானமானவன் என்கின்றார் திருவள்ளுவர்.

**அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண் பில்லா தவர்.**

இறையுணர்ச்சி இன்றியமையாதது. இறைவன் எங்கும் உளன், எல்லாம் அறிகின்றவன் என்று கருதினால், மனத்தாலும், வாக்காலும், செயலாலும் தீவினை செய்யமாட்டார்கள்.

*If a man has the power to abstain from falsehood, to abstain from falsehood, (I say;) then, though he practise no other virtue, it will be with him.* *297*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு உடம்புக்கும் தலையுண்டு. காலில்லாத உடம்பு உண்டு. கையில்லாத உடம்பு உண்டு. தலையில்லாத உடம்பு வாழாது. ஒரு குடும்பத்துக்கு ஒரு தலைவன் உண்டு. ஒரு பஞ்சாயத்து மன்றத்துக்கு ஒரு தலைவன் உண்டு. மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர் உளர். ஒரு கட்சிக்குத் தலைவர் உண்டு. எல்லாவற்றுக்குந் தலைவர் இருப்பதுபோல், அகில உலகங்கட்கும் ஒரு தலைவன் உண்டு. இறைவன் ஒருவன் உண்டு. 'உண்டு என்று அறிவுடைய உலகம் உரைப்பதை, ஒருவன் இல்லையென்றால், அவனைப் பேய் என்று வைக்கவேண்டும்' என்று திருவள்ளுவதேவர் தெரிவிக்கின்றார்.

**உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்**
**தலகையா வைக்கப் படும்.**

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு' என்கிறார் தொல்காப்பியர். ஆதலால் அறிவுடைய பெருமக்கள் எல்லோரும் உண்டு என்ற தெய்வத்தை, இல்லையென்று சில ஆசிரியர்களே மாணவர்களின் இளம் உள்ளத்தில் நஞ்சு ஊசியை ஏற்றிக் கெடுக்கின்றார்கள். எதிர்காலம் மாணவர்களின் நல்லொழுக்க வளர்ச்சியில் இருக்கின்றது. நம் மாணாக்கர்களை உண்டாக்கும் பொறுப்பு ஆசிரியரின் தலைப்பாரம் ஆசிரியர்களையும், கல்வி நிலையங்களையும், நன்முறையில் நடத்தும் பெரும் பொறுப்பு, பஞ்சாயத்து மன்றத்தின்பால் அமைந்துள்ளது. ஆதலால், பஞ்சாயத்து மன்றங்கள் தம் கடமையை நன்கு உணர்ந்து, கல்வித் துறையைப் பண்பு வளர்க்கும் முறையில் கண்காணிக்க வேண்டும்.

மக்கள் நீதியைக் கடப்பிடித்து வாழ்வார்களாக: யாண்டும் நீதி நிலைபெறுவதாக. இறையருள் என்றும் இனிது துணைபுரிக.

*நன்றி:-* ***வாரியார் விரிவுரை விருந்து***

ஒரு குரு தம்முடைய சீஷனுக்கு ஞானங்கள் உபதேசித்தார். உபதேசிக்கும் போது, சீஷன் தன் வளையிலே நுழையப் போகும் எலியைப் பார்த்து அதன்மேலே நினைப்பாக இருந்தான். குரு உபதேசித்தவுடனே "சீஷா, எல்லாம் நுழைந்ததா" என்றார். சீஷன் "எல்லாம் நுழைந்தது, வால் மாத்திரந்தான் நுழையவில்லை" என்றான். மூடர்களுக்குச் சொல்கிற புத்தி இப்படியே இருக்கும்.

ஓராசிரியன் சீஷன் வீட்டுக்குப் போய், சில வார்த்தைகள் பேசிக்கொண்டு இருக்கும்பொழுது, "சீஷா, உன் பிள்ளைகள் நால்வருள் யோக்கியன் யாவன்" என்றான். "சுவாமீ, இங்கே கூரை வீட்டின் மேல் ஏறிக்கொண்டு கொள்ளிக்கட்டை சுழற்றுகிறானே இவன்தான் இருக்கிறவர்களுக் குள்ளேயே பரம யோக்கியன் என்றான். குரு "மற்றை மூவர்கள் எப்படிப்பட்டவர்களோ" என்று, மூக்கின்மேலே விரல் வைத்து, பெருமூச்சுவிட்டு "அப்படியா" என்று விசனப்பட்டான்.

ஒரு செல்வன் தன் பிதாவுக்கு ஓட்டிலே கஞ்சி வார்த்துக்கொண்டு வந்தான். அவன் பிள்ளை அதைப் பார்த்து, அந்த ஓட்டை எடுத்து ஒளித்துப்போட்டான். பின் அந்தச் செல்வன் தன் பிதாவைப் பார்த்து, "ஓடு எங்கே?" என்று கேட்டு அடித்தான். அப்பொழுது அந்தப் பிள்ளை "அப்பா, என் பாட்டனை அடியாதே; நானே அந்த ஓட்டை எடுத்து ஒளித்து வைத்தேன்; ஏனென்றால், நான் பெரியவன் ஆனபின் உனக்கு வேற ஓடு சம்பாதிக்கமாட்டேன்" என்றான். அதைக் கேட்டு, செல்வன் வெட்கப்பட்டு அன்று முதல் தன் பிதாவை மிகுந்த சௌக்கியமாக வைத்திருந்தான்.

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பாலபாடம்**

**புறம்தூய்மை நீரான் அமையும்; அகம்தூய்மை**
**வாய்மையால் காணப் படும்.**

ஒருவனது உடம்புத் தூய்மை நீரால் உண்டாகும்; உள்ளத் தூய்மை வாய்மையால் அறியப்படும். 298

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே உனை மறந்துய்வனோ?

சித்தாந்தபண்டிதர், வாகீசகலாநிதி,
**கனகசபாபதி நாகேஸ்வரன்**, எம்.ஏ.

"சர்வமத சந்நிதி" என்று புகழ்பெறும் நயினையம்பதி பல்வேறு காரணங்களினாலும் அடியார்களைக் கவர்ந்திழுத்துத் தனது 'ஈர்ப்புத்தன்மையைத்' துலக்கி நிற்கிறது. என்றென்றும் மக்கள் உள்ளத்தில் அருள்பாலித்து ஈர்த்து ஆட்கொள்ளுகின்ற மாபெரும் சக்தியாகவும், தாயாகவும், தயாபரியாகவும் அமைந்து கருணை பொழிகின்றாள் நயினை நாகபூஷணி.

மகப்பேறும், மாங்கல்யப்பேறும், கவிப்பேறும், கல்விப்பேறும், புகழ்ப்பேறும் என்று மக்கள் வாழ்வில் எல்லோருமே அவாவுகின்ற பெருநலன்களையும் வளங்களையும் வேண்டுவோர் அனைவர்களுக்கும் வழங்கும் தெய்வமென மிளிர்கின்றவள் ஸ்ரீ நயினை நாகபூஷணி அம்பாள். அலைகடல் மத்தியில் அலங்கார பூஷிதையாக விநாயகர், வள்ளி தெய்வயானை சமேத முருகக் கடவுள் சகிதம் வீதிவலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி ஆகும். கோயிற் சூழல் மனோரம்மியமானது. பச்சைப்பசேல் என்ற பச்சிலைகளைத் தாங்கிய பிணிதீர்க்கும் மாமருந்தாகிய வேப்ப மரங்களை வெளிவீதியில் கொண்டிலங்கும் புனித வீதியைக் கொண்டது நயினைத்தலம். வெண் மணலாலான ஆன வெளிவீதி, அடியார்கள் நிறைந்து காணப்படும் போது அழகு ஒளிர விளங்குகிறது.

திருவிழாக்காலங்களிலும் சரி, சாதாரண நாட்களிலும் சரி, இங்கு தினசரி மக்கட் கூட்டத்தினைக் காணமுடிகிறது.

அம்பாளின் அனுக்கிரகம் மிகவும் பெருமையுடன் பொலிந்து திகழும் புனிதத்தினைக் காணுகிறோம். மக்களது உணர்வலைகளும், கூற்றுக்களும், நேர்த்திகளும், நம்பிக்கைகளும் இவற்றினை உறுதிசெய்கின்றன. சமய நம்பிக்கை என்பது - தெய்வநம்பிக்கையானது- முற்றிலும் ஆத்மார்த்தமானது தனிநிலைப்பட்டது. இந்த நோக்கு நிலையிலே ஆராயும்பொழுது நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பேரருள் வியந்து நோக்கற்பாலது. அம்பிகை பல்வேறு நாம ரூபங்களிலும் பெயர்களிலும் அழைக்கப்பட்டாலும் அபிராமிப்பட்டர் கூறுவது போல அவள் ("அதிசயமான வடிவுடையாள்") என்ற கருத்து நயினையம்பாளை பொறுத்தமட்டில் மிகவும் ஊன்றிச் சிந்தித்தற்குரியது. ஏனெனில், நாம் ஓர் உருவத்தைக் கற்பிக்க அவ்வுருவத்தினின்றும் மாறுபட்ட வடிவிலே தோன்றுபவள் நாகம்மாள். இப்பண்பு அம்பாளின் திருவிளையாடலைக் குறிக்கும்.

அடியவர்களுடைய பக்குவ நிலைக்கு ஏற்ப (அவரவர் தகுதிக்கேற்ப) தெய்வ தரிசனம் அமையும் என்ற கருத்து நாகம்மாளைப் பொறுத்தமட்டில் முற்றிலும் உண்மையானது. இன்றும் பெண்ணுருவிலே வெள்ளைச் சேலையணிந்து கனவிலே அம்பிகை தோன்றுவதினைப் பலரும் கூறக்கேட்டிருக்கின்றோம். இது ஒருவகைக் காட்சி. வீரசாமிச் செட்டியாருக்கு நாகம்பாள் நாகமாகக் காட்சி கொடுத்தாள் என்ற வரலாறு மற்றையது. அனேகமான அம்பிகை அடியார்கள் நாகபூஷணியம்மனை நாகமாகவே (பாம்பாகவே) கண்டுள்ள காட்சி புலப்பாடு அம்பாளின் அறக்கருணையையும் அருள் வீச்சினையும் எடுத்துக் காட்டுகிறது. இவ்வாலயத்தினுடைய வரலாறும் இவ்விடத்திலே இணைத்துச் சிந்திக்கப்படத்தக்கது. அதாவது அனலைதீவில் உள்ள நாகதம்பிரான் சிவாலயத்தில் இருந்து நாகமொன்று பூவினைக் கொய்து கொண்டு நாகம்மாளை வழிபட்டு வந்ததாக வரலாறு ஒன்று உண்டு. இப்பின்னணியை ஆராய்ந்து

*Purity of body is produced by water; purity of mind comes from truthfulness.* 298

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கும் போது நமக்கு முதலிலே புலப்படுவது நாகதம்பிரான் எனப்படும் ஆண் தெய்வத்தினது சக்தியாக நாகம்மாள் இருப்பதான உண்மையா கும். நாகதம்பிரான், நாகபூஷணி என்ற நாமங்கள் (பெயர்ப்பொருத்தம்) நுணுகி ஆராயத்தக்கது. நாகதம்பிரான் வடிவம் ஐந்துதலை நாகத்தின் பின்னணியில் அமைந்த சிவலிங்கம் ஆகும். இன்றும் அடியார்கள் நாகதம்பிரான் சிலைக்கு வழிபாடியற்றும் முறைமையில் இருந்து நாகதம் பிரானுடைய அனுக்கிரகம் உணர்ந்தறியத்தக்கது. புளியந்தீவு நாகதம்பிரான், அனலைதீவின் தனிப் பெருங் கடவுள். நயினை நாகபூஷணி தனிப்பெரும் சக்தி. இவ்வியைபு ஆழ்ந்து நோக்கத்தக்கது.

தீராத பல பிணிகளையும் நோய்களையும் தீர்த்தருளும் வல்லமை நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கு உண்டு. இதனால் இங்கு வழங்கப் படும் சிவசின்னங்கள் அன்பர்களாலே பேணப்பட்டு உடம்பிலே அணியப்படுகின்றன. விபூதி, சந்தனம், குங்குமம், நூல், படங்கள், தீர்த்தம், மலர்கள் (பூ), புத்தகங்கள், மண், பிரசாதம், பஞ்சாமிர்தம் என்பன இன்றும் மிகுந்த பக்குவத்துடன் மக்களால் அணியப்படுகின்றன. தெய்வம் பல்வேறு வடிவங் களிலேயும் மானிட ஆற்றல்களினூடே உலகிற்கு வெளிப்பட்டு நிற்கின்ற தன்மை அம்பிகையின் அருளால் எனக்காண்கிறோம். அம்பாளின் அருட் கடாட்ஷம் அத்தலத்தில் உற்பவிக்கின்ற (கரு வாகத் தோன்றுகின்ற) ஒவ்வொரு உயிர்களிடத் திலும் நிரம்பிய அருட்புலமையை (திருவை) உண்டுபண்ணி ஞான முழுமை பெற்ற பூரண ஆத்மாவாக உற்பவிக்கச் செய்கின்ற சிறப்பாகும். "முழுமையான மனிதன்" என்பவன் சிந்தனை யால் மனவளர்ச்சியால், கல்வியறிவால், அனுபவ ஞானத்தால், அன்புடைமையால், பணிவுடைமை யால், இன்சொல் கூறலால், விருந்தோம்பலால், நன்றி பாராட்டும் திறத்தால் பெரிதும் தன்னிறைவு செய்து மிளிர்வான். இத்தகு சிறப்பும் பெருமையும் பண்பாடும் கொண்டிலங்கும் ஊரினராக நயினை மக்கள் இன்றும் உலகமக்களினால் புகழ்ந்து பாராட்டிப் பேசப்படுவதினை அறியமுடிகிறது. ஆன்மிகம், பக்தி, பணிவு, பண்பாடு இவை கரு விலே ஒருவனுக்கு வாய்க்க வேண்டிய அற்புத மான குணநலங்களாகும்.

"கருவிலே திருவுடையார்" என்று வழங்கும் வழக்கு ஒன்று இன்றும் உள்ளது. இக்கூற்றின் பொருத்தப்பாடு இன்றும் குறிப்பாக நயினை மக்களுக்கு மிக்க பொருத்தமாக விளங்குகிறது. இவ்வாறு தற்சார்பாகவும், ஒருபக்க நோக்கு நிலையிலும் தற்புகழ்ச்சியுடனும், பக்கச் சார்பா கவும், தற்பெருமையுடனும், ஆணவத்துடனும், அகங்காரத்துடனும் பிறரைத் தூசிக்கும் மனோ நிலையிலும், மற்றையோரை மதிக்காத தன்மை யுடனும், இக்கருத்துக்கள் இங்கு கூறப்படுவதாக எவருமே எண்ணிவிடுதல் கூடாது. எவ்விதக் காழ்ப்பும் பாரபட்சமும், வஞ்சனையும், பொறாமை யும் இவ்விடத்திலே எமக்குக்கிடையாது. ஆயினும் இன்றும் இனியும் எக்காலத்தும் சைவத்தமிழின் தமிழினத்தின் பண்பாட்டுப் பெருமையையும் பாரம் பரியத்தையும் வழிபாட்டு மரபையும், தேசிய நோக்கையும், உயரிய மனோபாவத்தினையும் பெருமையுடன் பேணிக்காக்கவல்ல தகைமையும் திடசித்தமும் உறுதியும் உணர்வு நலனும் தீவக மக்களிடையே தான் சுவறியுள்ளது எனக் கூறினால் அது மிகையான கூற்றல்ல. இன்று இப்பெருமை களைக் கொண்டிருக்கும் இப்பிரதேச மக்களை "கிணற்றுத் தவளைகள்" என்றும் நாகரிகமற்ற வர்கள் என்றும் பழக்கவழக்கம் தெரியாதவர்கள் என்றும் தூசிக்கப்படுவது உண்மை. குற்றமும் குறையும் சொல்லப்படுவது மானிட வரலாற்றில் இயல்பான ஒன்று. இது புதிய விஷயமல்ல. எனி னும் இவை குறித்த விசாரணைகளோ இப்படிச் சொல்லுவோரது நியாயங்களையோ நாம் (தீவக மக்கள்) பொருட்படுத்த வேண்டியது இல்லை.

**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு.**

துறவியர்க்குப் புறஇருள் போக்கும் விளக்குகள் எல்லாம் விளக்கு ஆகமாட்டா. அகஇருள் போக்கும் பொய்யாமையாகிய விளக்கே விளக்காகும். 299

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக உயர்ந்த வாழ்க்கை விழுமியங்களை இன்றும் பேணிப்பாதுகாத்து உறுதிபட வாழ்வது தீவகப் பண்பாடாகும். ஒவ்வொரு ஊருக்கும் மக்களுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் நடையுடைபாவனைகளுக்கும் திருமண நடைமுறைகளுக்கும் உள்ளார்ந்த வேறுபாடு உண்டல்லவா? இவற்றை நாம் எவ்வாறு நிராகரிப்பது. ஆனால் புதுமையை அவாவுறுகின்ற நோக்கோடும் ஈடுபாட்டோடும், முயற்சிகளோடும் தொன்று தொட்டு நிகழ்ந்துவந்த பாரம்பரியப் பழமைகளைப் பேணுகின்ற "திடசித்த வைராக்கிய நம்பிக்கை" நமது நயினை மண்ணிலே பிறந்த மக்களுக்கு (உலகு தழுவிய நிலையில்) இன்றும் உண்டு. பண்பாட்டின் சிறப்பு வெளிப்பாடு அவையினரிடத்திலே தான் (குழுநிலை) கொண்டாட்டங்களின் போது வெளிப்படும். இன்று நமது மக்கள் ஊரவர்கள் உறவினர்கள் மேற்குலகுக்குச் சென்று வாழ்க்கையை நடத்துகிறார்கள் பல்லின, பன்மொழி, பல கலாசார, பல்வழிபாட்டு நிலைமைகள்தான் "நமது இருப்பினை", "நமதுபண்பாட்டினை", "நமது வழிபாட்டு மரபை", "நமது தெய்வ வழிபாட்டை", "நமது இசையை", "நமது திருமுறையாற்றலை" (தேவார ஓதுதலை) உணவுப் பழக்கவழக்கத்தினை எல்லாம் இனங்கண்டு கொள்ளப் பெருவாய்ப்பாக அமைந்துள்ளது. இந்நடைமுறை இனியும் பல்வேறு வகைப்பட்ட நமது செழுமையான பண்பாட்டு பாரம்பரியத்தின் தடங்களை வெளிக்கொணர்ந்து பெருமை சேர்க்கத்தான் போகிறது. இப்பெருமையை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நாம் நம்பவில்லை. ஏனெனில் தேவார இசைபாடும் தனித்துவமும், சிறப்பும், தியாகத்தின் அடிப்படைகளை உணர்ந்து ஆன்மீக வழிகாட்டிகளாகத் திகழும் ஞானிகளாயும், யோகிகளாயும், சித்தர்களாயும், புனிதர்களாயும் பரிணமிக்கும் அருள் வள்ளல்களையும் நமது மண் (தீவகம்) பெற்றெடுத்துள்ளது. இக்கருத்துக்கள் மேலும் மேலும் துருவித்துருவி நுணுகி ஆராயத்தக்கவை. நயினைச்சுவாமிகள் என்று அழைக்கப்படும் முத்துக்குமார சுவாமிகள் இன்றும் அருள்வீச்சுக் கொண்ட மகான். அம்பாளின் கவிவாணர்கள் பலரையும் கல்விமான்கள் பலரையும் உருவாக்கியுள்ளது. மிக எளிமையாகவும் இயல்பாகவும் ஆற்றலுள்ள கவிதைகளை இலக்கியப் படைப்பாக்கங்களை வெகுலாவகமாக ஆக்கிய ளிக்கும் திறன், திறமை, அம்பாளின் பேரருளால் கைவந்த கலையாயுள்ளது. எண்ணிக்கையால் அதிகமான கலைவாணர்களும், கவிவாணர்களும், கவிச் செல்வர்களும், ஓவியச் செல்வர்களும் தோற்றம் பெற்றுள்ள ஊர் நயினையம்பதியாகும்.

இத்தகு மானுடச் சிறப்புகள் பலவும் ஒருங்கே அமைவதற்குக் காரணம் உள்ளன்போடு இயற்றும் "வழிபாட்டு" மரபாகும். அப்பர் சுவாமிகள் வழிபாட்டு நோக்கினைப் பின்வருமாறு தேவாரத்தில் நிறுவுகிறார். "சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்" தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" என்ற தேவாரத்தில் வழிபாட்டு மரபின் அழுத்தத்தையும் செம்மையையும் கண்டு கொள்வதுடன் இக்கருத்துக்களை தேவாரத்தின் மூலம் திருநாவுக்கரசு நாயனார் பிறசமயத்தவர்க்குக் கூறவில்லை நமக்குக் கூறியுள்ளார் என்ற எண்ணத்தோடு அவற்றை மதித்தும் கடைப்பிடித்தும் போற்றியும், புகழ்ந்தும், ஏத்தியும், துதித்தும், கைக்கொண்டும் வாழ வேண்டும் என்ற கொள்கையோடும் அறிவுத்தெளிவோடும் வாழுபவர்கள் நயினை மக்கள். நயினாதீவில் படமாளிகை கிடையாது, இரவு விடுதி கிடையாது, கேளிக்கைகள் கிடையாது, வீண் பொழுதுபோக்குக் கிடையாது. விவசாய வளம் நயினாதீவில் உண்டு. மழைக்காலங்களைத் தவிர நீர்ப்பாசனத்துக்குரிய நீரினைக் கிணறுகளின் மூலமே பெற்றுக்கொள்வர். வெங்காயம், மிளகாய், புகையிலை, கத்தரி, தக்காளி, நெல் என்பன நயினாதீவில் விளைபொருட்கள் ஆகும். ஒரு சிலர் கடலில் சென்று மீன்பிடித்தொழிலைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வருகின்றனர். உயர்கல்வி கற்பதற்குரிய அரசினர் தமிழ் மகாவித்தியாலயம் உண்டு. ஆரம்பக் கல்வியையும், இடைநிலைக் கல்வி யையும், க.பொ.த. உயர்தரக் கல்வியையும் நயினாதீவிலேயே கற்கக்கூடிய வசதி தற்போது உள்ளது. சிறிதும் பெரிதுமான ஆலயங்கள் இருபதிற்கு மேல் இங்குள்ளது. பௌத்தர்கள் யாத்திரை சென்று வழிபட்டு வணங்கிச் செல்லவும் சிறப்பு மிக்க பௌத்த விகாரை இங்குள்ளது. புத்த பகவான் நயினைக்கு விஜயம் செய்ததாகச் சிங்கள வரலாற்று நூலான மகாவம்சம் குறிப்பிடு கிறது. கிறிஸ்தவ தேவாலயமும், முஸ்லிம் பள்ளிவாசலும் இங்கு உண்டு. சிறிய தீவே ஆயி னும் மகிமை பொருந்தியது நயினைதீவு. இன்று ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் வட கடலின் கரையிலே "பாம்பு சுற்றிய கல்", "கருடன் கல்" என இரண்டு கற்பாறைகள் நாம் காணக்கூடியதாக உள்ளன. இவை ஆதியிலே கோயில் கட்டிய வரலாற்றை இன்றும் ஆய்வாளர்களுக்கும், பிறர்க் கும், வியக்கத்தக்க சான்றாதாரங்களாக நிலவு கின்றன. மகாபராக்கிரமபாகு காலத்துக் கல்வெட்டு இன்றும் ஆலயத்திலே காணப்படுகின்றது. உலகு தழுவிய வர்த்தகப் போக்குவரத்துப் பாதை யாக நயினாதீவு, பாம்பன், ஊர்காவற்றுறைக் கடல் மார்க்கம் அமைந்திருந்தது என்ற பழைய வர்த்தகச் செய்தியை நயினைக் கல்வெட்டு உணர்த்தி நிற்கின்றது. பேராசிரியர்கள் கலாநிதி. கா. இந்திரபாலா, சி. பத்மநாதன், சி.க. சிற்றம்பலம் போன்றவர்கள் இன்றும் இக்கல்வெட்டுப் பற்றியும் நாகவம்சம், நாகவழிபாடு, மணிபல்லவம், நாகதீபம் போன்ற விசயங்களில் நுணுக்கமான ஆய்வுகளை நிகழ்த்தி, நயினாதீவின் வரலாற்றுப் பெருமை யையும் இலக்கியப் பெருமையையும் நாக வழி பாட்டினுடைய தொன்மையையும் சக்தி வழிபாட்டி னுடைய பெருமையையும் மிக விரிவான கட்டுரைக ளாகவும், நூல்களாகவும் எழுதியுள்ளனர். நயினை அம்பாளின் ஆரம்பகால வரலாற்றை நூலாக்கிய முதலியார் குல. சபாநாதன் இவ்விடத்திலே நினைக்கப்பட வேண்டியவர். "நாகம் பூசித்த நயினை ஸ்ரீ நாகபூஷணியம்மன்" என்ற நூலைக் கோயில் அறங்காவலர் சபையினர் வெளியிட் டுள்ளனர். நயினைக் கவிஞர் நா.க. சண்முகநாத பிள்ளை அவர்கள் அம்பாளுடைய வரலாற்றை நூலாக வெளியிட்டுள்ளார். காலத்துக்குக் காலம் அம்பிகையின் அருளுக்குப் பாத்திரர்களான நயினை மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர்கள், பண்டிதர், வித்துவான், ப.க. குகதாசன், ப.க. காமாட்சி சுந்தரம், பசிக்கவி. நா.வி.மு. நவரத்தினம் (தலைவர் - இசைத்துறை யாழ்ப்பா ணப் பல்கலைக்கழகம்), நா.க. சண்முகநாத பிள்ளை, ப.கு. சரவணபவன், கவிஞர் இராமும் பிள்ளை, சுப்பிரமணியம் கனகரத்தினம், சைவப் புலவர் நா. விசுவலிங்கம், போன்றோரைக் குறிப் பிடலாம்.

அமுதசுரபி அன்னதான சபை, சோமசேகரம் தாகசாந்தி நிலையம், தொண்டர்சபை, சாரணர் படை, பஜனை சபையினர்கள், உபயகாரர்கள், சிற்பாசாரியர்கள், கலைஞர்கள், அந்தணச்சிவாச் சாரியப் பெருமக்கள், பாடசாலை மாணவர்கள், பரிசாரகர்கள், பாதுகாப்பு அதிகாரிகள், அறங் காவலர்கள், படகு ஓட்டிகள், போக்குவரத்துக்கு உதவிய பெருமக்கள், வடந்தொட்டுத் தேரிழுத்த அடியார் பெருமக்கள் அனைவரும் பெரும் பாராட்டுக்குரியவர்கள். இவர்கள் பணி பெரும் பணி, தன்னலமற்ற பொதுப்பணி, இப்பணியை அம்பிகை கடைக்கண் பார்த்துப் பரிபூரணமான திருவருளை அருளவேண்டும் என அவர் திருவடி களைத் தொழுது இறைஞ்சி நிற்கின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்."

"முற்றும்"

**யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும்**
**வாய்மையின் நல்ல பிற.**

யாம் உண்மையான அறங்களாகக் கண்டவற்றுள், எவ்வகையிலும் வாய்மை போலச் சிறந்த அறம் வேறு இல்லை. 300

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரகங்கள்

ஸ்ரீவாலையானந்த சுவாமிகள்

பாபிகள் சென்றடைந்து 28-கோடி பேதமாய்த் தெண்டிக்கப்படும் நரகங்கள் 28-கோடியுண்டு. அவைகள் நரகம், மாநகரம், இராசநரகம், இராசரா சேசுர நரகமென நான்கு வகைப்படும். அவற்றுள் நரகம் இரௌரவம், துவாந்தம், சீதம், வெப்பம், சந்தாபம், பற்மம், மாபற்மம், காலசூத்திரமென எண்வகைப்படும். மாநரகம் சூசிமுகம், காலகடகம், மகுரதாரம், அம்பரீடம், தத்தர்ஙகாரம், மாதாகம், சந்தாபம், பீபற்சமென எண்வகைப்படும். இராச நரகம் இலாக்காப்பிரலேபம், மாஞ்சாதம், நிருச்சுவா சவுச்சுவாசம், யுக்குமாத்திரி, சான்மலி, உலோகப் பிரதீர்த்தம், சுரபிபாசம், கிருமிநிசயமென எண் வகைப்படும். இராசராசேசுரநரகம் உலோகத்தம்பம், விண்மூத்திரம், வைதாணியம், தாமிச்சிரம், அந்ததா மிச்சிரம், கும்பிபாசம், மாரௌரவம், அபீசியென எண்வகைப்படும். இந்த நால்வேறு வகையில் எவ்வேழுக்கு ஒவ்வொன்று பிரதான நரகமாகவி ருக்கும். பிரதானங்கள் நீக்கி நின்ற 28-நரகமும் கோடிக்கொன்றாக 28-கோடி நரகங்களுக்கும் பிரதானங்களாயிருக்கும். இன்னுமிவற்றின் உட் பிரிவாக சூகரம், தப்தகும்பம், தப்தலோகம், தப்தகலம், சுவாலை, சந்தம்சம், சுவபோசனம், உரோதம், தாலம், திவசனம், மகாசுவாலை, தப்தலவணம், விலோகிதம், பூயவாகி, கிரிமிலகா, கிருமிபோசனம், அபாயம், அதசிரசு, தமசு, விசி ரோதனம், அதிருட்டம் முதலிய பலநரகங்களுண்டு.

இவற்றுள், சிவஞானி, வேதியர் முதலியோ ருக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொன்னவன் ரௌரவத்தையும், சிசுகத்தி கோகத்தி பிரமகத்தி செய்தவனும் பிறர்பொருளையபகரித்தவனும் விசு வாசகாதகனும் சுராபானஞ் செய்தவனும் பொன் திருடினவனும் இப்பாவிகளோடு சினேகஞ்செய் தவனும் சூகரமென்னும் நரகத்தையும், ஆசாரிய னைக் கொன்றவனும் உடன்பிறந்தாளுடன் போகித் தவனும், தாயைப் புணர்ந்தவனும், தப்தகும்ப மென்னும் நரகத்தையும், பதிவிரதைகளைப் பலாத்காரமாகப் புணர்ந்தவனும், தன் மனைவி யைப் பிறனுக்குச் சேர்ப்பித்தவனும் தப்தலோக மென்னும் நரகத்தையும், ஆசிரியனை அவம தித்தவனும், தன் தாய் தந்தையர் குழந்தைகள் முதலியோரை வஞ்சித்துப் புசித்தவனும் தேவ தூடணஞ் செய்தவனும் வேதவிக்கிரயஞ் செய்த வனும், சேரத்தகாத ஸ்திரிகளைச் சேர்ந்தவனும் தப்தகலமென்னும் நரகத்தையும், தர்மசாஸ்திர விரோதமாக நடந்தவன் அவிசிரோதமென்னும் நரகத்தையும், தேவபிதுர்க்களைத் துவேஷித்த வனும் இரத்தினங்களைக் குறைத்து மதித்தவனும் புனிதமான விரத்தினங்களுக்குத்தோடஞ் சொன்ன வனும், தேவர் பிதுரர் முதலியோருக்கு நிவேதி யாது புசித்தவனும் லாலாபக்கமென்னும் நரகத் தையும், அன்னபானங்களில் விஷங்கலந்து கொடுத்தவன் விச்சனமென்னும் நரகத்தையும், அசத்தியவான்களோடு சினேகித்தவனும் புசிக்கத் தகாதவற்றைப் புசித்தவனும், யாகஞ்செய்ய அருகரல்லாதவர்க்கு யாகஞ்செய்வித்தவனும் உருதிராந்தமென்னும் நரகத்தையும், சிநேகித னைக் கொன்றவனும் மதுவைக் காரணமின்றி விரும்பியபொழுது பருகினவனும், வாலிபத்தால் மத்தனாகித் தர்மசாஸ்திர விரோதமாக நடந்தவ னும். தன் சீவனமார்க்கத்தை விடுத்துக் கபட மார்க்கமாகச் சீவித்தவனும் வைதரிணி என்னும்

***Amidst all that we haye seen (described) as real (excellence), there is nothing so good as thruthfulness.*** ***300***

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நரகத்தையும். பசுமையான மரங்களை வெட்டு கிறவன் அசிபத்திர நரகத்தையும், மிருகங்களை யிம்சிப்பவனும், வீடு முதலியவற்றை நெருப்பாற் கொளுத்தினவனும், வன்னிசுவாலையென்னும் நரகத்தையும். தனது ஆச்சிரம தருமங்களை விடுத்தவனும், பிறருடைய விரதங்களைக் கெடுத்தவனும், சந்தம்சம் என்னும் நரகத்தையும், பகற்காலத்தில் ரேதஸ் கலனஞ் செய்தவன் சுவ போசனமென்னும் நரகத்தையும் அடைந்து சொல்லத் தரமில்லாத பலவித கஷ்டங்களை யனுபவிப்பார்கள். இந்நரகவாசிகள் ஒருநாளுந் தேவர்களைப் பார்க்கிறதில்லை. பாவத்தை அறி வில்லாமற் செய்துவிட்ட போதிலும் அதற்குத்தக் கபடி மனு ஸ்மிருதி முதலிய நூல்களில் கூறிய படி பிராயச்சித்தங்களைச் செய்து அந்தப் பாவத் தின் சக்தியைக் குறைத்துக் கொள்ளாதவர்கள் இவ்வாறு நரகலோகங்களை அடைந்து துன்பப் படுவார்கள். பிராயச்சித்தங்களைச் செய்துகொள் ளச் சக்தியில்லாவிடின், நாம் பாவஞ் செய்தோமே யென்ற ஏக்கத்துடனும் பந்தப்புடனும் தனித் திருந்து சிவபெருமானைத் தியானித்துத் தன் பாவங்களை மன்னிக்கவேண்டுமென்று கண்ணீர் விட்டுக் கரைந்து காலை மாலை உச்சிகளில் பிரார்த்தித்தல் வேண்டும். இவ்வாறு செய்யவே பாவம் வலிகெட்டொழியும்.

இந்நரகங்களுக்குமேல் கூஷ்மாண்ட புவன மானது அதன் கீழ்பால் மண்ணும் நடுவில் இரும் பும், மேல்பால் பொன்னுமாக மூன்று கூறாயிருக்கும். அவற்றுள் மேல்பாலில் நரகங்களுக்கு அதிபதி யான கூஷ்மாண்டர் ஊழிக்காலத்துச் சூரியனைப் போன்ற வடிவமும், காராளமுகமும் முக்கரமும் உடையவராய்த் தம்மோடொத்த உருத்திரகணங் களுடனிருப்பர்.

*நன்றி:-* ***சித்தாந்தப் படவிளக்கம்***

ஒரு பாடகன் தெருத்திண்ணையிலே இருந்து தலையசைத்துக் கொண்டு சங்கீதம் பாடினான். வெகுசனங்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது வழியிலே போகிற ஒரு ஆட்டிடையன் அங்கே நின்று சற்றுநேரம் பார்த்துத் தேம்பித் தேம்பி ஓயாமல் அழுதான். இருந்தவர்கள் ஆனந்தத் தாலே அழுகிறான் என்று எண்ணி, "ஏன் அழுகிறாய் அழாதே" என்றார்கள். இடையன் ஐயோ! என் மந்தையிலே ஒரு ஆடு இந்த வழியே வரப்பெற்று, கோணக் கோண இழுத்து, யாதொன்றினாலும் பிழையாமல் இறந்துபோயிற்று; அது இந்தப் பிள்ளைக்கும் வந்ததே என்று அழுகிறேன்; ஆனால், இவனுக்கு உடனே சூடு போட்டால் ஒருவேளை பிழைப்பான்" என்றான். அவர்கள் அவனுடைய அறியாமையைக் கண்டு நகைத்து, அவனைத் திட்டித் துரத்தினார்கள்.

ஒருவன் பதினாயிரம் வராகன் வைத்திருந்தான். அவன் தனக்கு மரணகாலம் சமீபித்ததை அறிந்து, தன் இரண்டு பிள்ளைகளையும் அழைத்து, ஒவ்வொருவனுக்கும் ஐவைந்து பணம் கொடுத்து, "இதனாலே வீட்டை நிறையப் பண்ணுகிறவனுக்கு என் பொருளைக் கொடுப்பேன்" என்றான். அவர்களுள் மூத்தவன் ஐந்து பணத்துக்கும் மலிந்த பண்டமாகிய கருப்பஞ் செத்தை வாங்கிவந்து, வீடு நிறையக் கொட்டிப் பரப்பிவைத்தான். இளையவன் மெழுகுவர்த்தி வாங்கிவந்து, ஏற்றி எங்கும் பிரகாசிக்க வைத்தான். பிதா அவ்விரண்டையும் பார்த்து, தீபம் ஏற்றினவனுக்கே பொருளை ஒப்பித்தான். - புத்தியுள்ளவனே பெரியவன்.

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பாலபாடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைத் தவவாழ்க்கை

மறைமலையடிகள்

தொல்காப்பியனார் காட்டிய தவநெறியிலேயே வடநாடு தென்னாடுகளிற் பண்டைக்காலத்திருந்த முனிவர்கள் எல்லாரும் நிலைநின்றனர் என்பதற்கு, வடநாட்டு முனிவராகிய மரீசி, அத்திரி, அங்கீரசர், புலகர், கிரது, புலத்தியர், வசிட்டர் முதலியோ ரெல்லாந் தத்தம் மனைவிமாரோடிருந்து தவஞ் செய்தமையுந் தமிழ்நாட்டிலிருந்த பாலைக் கௌத மனார், திருவள்ளுவனார், சுந்தரர் முதலாயினாரும் பெரியபுராணத்துச் சொல்லப்பட்ட சைவ நாயன்மார் பலருந் தத்தம் மனைவியரோடுமிருந்தே தவமி யற்றிச் சிவபிரான் திருவடிப் பேரின்பத்தை எய்தி னமையுமே சான்றாகும். இது குறித்தன்றோ தெய்வத் திருவள்ளுவனாரும்,

"அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அ∴தும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று"

என்னுந் திருக்குறளால் அறவாழ்க்கை எனப் படுவது இல்வாழ்க்கையேயா மென்றும்,

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்"

என்னுந் திருக்குறளால் துறவுநிலை புகுதல் பயன் இன்றாமென்றுந் தொல்லாசிரியர் வழியே கடைப்பிடித்து ஓதியதோடு, 'துறவு' என்பது நெஞ்சினாற்றுறத்தலே யாமெனவும், "யான் செய் தேன்" என இறுமாந்துரைக்கும் அகப்பற்றும், 'எனது பொருள்' எனச் சொல்லும் புறப்பற்றும் ஒருங்கறுதலே யாமெனவும் வற்புறுத்துவாராய்,

"நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்"

என்றும்,

"யான்எனது என்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்"

என்றும் அருளிச் செய்வாராயினர்.

---

ஒரு ஊரிலே ஒரு பார்ப்பான் இறைச்சி தின்று கள்ளுக் குடித்து வெறிகொண்டு திரிபவனாயிருந்தான். கல்வியறிவு உள்ள ஒரு சூத்திரன் அவன் மேல் இரங்கி அவனைப் பார்த்து, "ஐயா, நீர் கடவுள் அருளிய வேதாகமங்களுக்கு மாறாக இறைச்சி தின்று கள்ளுக் குடிக்கிறீரே, இதனால் உமக்கு மறுமையிலே நரகத் துன்பம் கிடைப்பதேயன்றி, இம்மையிலே எவர்களாலும் அவமதிப்பும் வரும். ஐயையோ! ஏன் கெட்டுப்போகிறீர்! உம்மிடத்திலே ஒழுக்கம் இல்லாதபோது பிராமணத்துவம் எங்கே" என்றான். பார்ப்பான் கோபங்கொண்டு, "நான் அப்படிச் செய்வதை அறிந்திருந்தும், அப்படிச் செய்யாத பிராமணர்களும் என்னையே நன்கு மதிக் கின்றார்கள். எல்லாரும் அந்தப் பிராமணர்களைப் பார்க்கிலும் என்னையே பெரியவர் எனக்கொண்டு, எனக்கே முதல் தானம் தருகின்றார்கள். என்னைப் பிராமணன் அல்லன் என்று இன்றைக்கு நீயே சொல்லக்கேட்டேன். உன் வீட்டுக்கு அரிசிக்கு வராமற் பார்த்துக்கொள்; போ போ பைத்தியக்காரா" என்றான். வித்துவான் பெருமூச்சுவிட்டு ஆலோசனையுடன் தலைகுனிந்து கொண்டு போனான். பார்ப்பான் தன்னோடு நின்று மூடனாகிய ஒரு செல்வனைப் பார்த்து, "தம்பி, இவன் வெட்கித்துப் போனான்; பார்த்தீரா"! என்றான். பணக்காரன் "ஆஆ சந்தேகம் என்ன சுவாமி!" என்றான்.

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பாலபாடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவு அறம் ஆகாமை

மேலும், இல்வாழ்க்கை யொன்றுமே அறனென வைத்துச் சொல்லப்படுவதற்கு உரித்தாவ தன்றித், துறவு வாழ்க்கை அறம் எனப்படுதற்கு உரிமை யுடைத் தன்று; ஏனெனிற் பிறவுயிரின் துயர்களைவதூஉம், மக்கள் பிறரின் துன்பந் துடைப்பதூஉம் ஆகிய செயலை உண்மையாற் செய்வாரது நல்வினையே அறம் எனப்படும்; இவ்வாறு செய்யப்படும் அறம் பழைய நாளில் முப்பத்திரண்டு வகையாகச் செய்யப்பட்டு வந்த தென்பது,

*"ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்கு உணவு*
*அறுசமயத் தோர்க்கு உண்டி, ஆவிற்கு வாயுறை,*
*சிறைச்சோறு, ஐயந், தின்பண்டம், மகச்சோறு,*
*மகப்பெறுவித்தல், மகவளர்த்தல், மகப்பால்,*
*அறவைப் பிணஞ்சுடல், அறவைத் தூரியம்,*
*வண்ணார், நாவிதர், வதுவையாற்றல், நோய்*
*மருந்து, கண்ணாடி, காதோலை, கண்மருந்து,*
*தலைக்கெண்ணெய், பெண்போகஞ், சுண்ணம், பிறர்துயர்*
*காத்தல், தண்ணீர்ப் பந்தர், மடந், தடம், கா,*
*ஆவுரிஞ்சு நடுதறி, ஏறு விடுத்தல்,*
*விலைகொடுத்துக் கொலையுயிர் மீட்டல், விலங்குணா*
*இச்செயல் முப்பத் திரண்டற மென்ப"*

என்னும் பழைய **திவாகரநிகண்டால்** தெளியப் படும். இங்ஙனமாக முப்பத்திரண்டு அறங்களைச் செய்யும் நிலை இல்லற வாழ்க்கைக்கு வாய்வதே யன்றித் துறவுக்கு வாயாது; ஆகவே, துறவினை அறம் என்னுஞ் சொல்லொடு புணர்த்துத் துறவறம் என வழங்குதலுஞ் சாலாது: அதனாலன்றோ தெய்வத் தொல்காப்பியர் 'துறவறம்' என்னுஞ் சொற்றொடரைத் தமது விழுமிய முழுமுதல்நூலுள் யாண்டுமே வழங்காராயினர். மற்றுத், திருவள்ளு வரோ தமதுகால வழக்கினைத் தழீஇத் 'துறவறம்' என்பதொன்று கூறினாராயினும், அவ்வியலில் இம்முப்பத்திரண்டறங்களுள் ஏதொன்றும் எடுத் துரையாது, புலாலுண்ணாமை, கள்ளாமை, வெகு ளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை, பொய் யாமை முதலாகச் செய்வதில்லாச் செயல்களை அறங்களாக எதிர்மறை முகத்தாற் கூறியருளினார். எனவே, அவர் கூறும் வகையிலிருந்துந் 'துறவினை' அறம் எனச் சொல்லுதற்கு ஏதும் இடம் இல்லாமை நன்கு விளங்குகின்றதன்றோ? அதுவேயுமன்றி, அவர் மனைவி மக்களைத் துறந்து தனியிருந்து நோற்பதே தவம் என்று 'திருக்குறளில்' ஓரிடத் தாயினுங் கூறாமையினை உற்றுநோக்கும்வழி, ஆசிரியர் தொல்காப்பியனார் மொழிந்தவாறே மனைவியுந் தானுமாயிருந்து அகப்பற்றுப் புறப்பற்று இன்றித் தூய அன்பின் வழிநின்று நோற்பதாகிய பண்டைத் தவநிலையே அவர்க்கும் உடம்பாடென்பது உய்த்துணரக் கிடக்கின்றது. இதுகாறும் அறம் என்பதைப் பற்றி ஆராய்ந்த அளவில், அ்.து இல்லறம் ஒன்றற்கே உரித்தாய்க், காதலன் பின்வழி நிகழும் மனைவாழ்க்கையின் நடுவெல்லையில் நோற்கப்படுவதாகிய தவநிலையி னையுந் தன்கண் அடக்கி நிற்கும் என்பதூஉம், முப்பத்திரண்டு வகையாகச் செய்யப்படும் அறங் களுள் ஏதுஞ் செய்யப்படுவதின்றி எதிர்மறை வகையாற் செயலின்றி நினைவளவில் நிற்பன வாகிய கொல்லாமை பொய்யாமை கள்ளாமை முதலியவற்றால் நிலைப்படுவதாகிய தவநிலை யினைத் துறவறம் என்றல் ஆசிரியர் தொல்காப்பிய னார்க்கு உடன்பாடன்றென்பதூஉம், இப்பேரா சிரியர் அறிவுறுத்திய அறத்தின்வழியொழுகியே திருவள்ளுவரும் நம் சைவ சமயச் சான்றோர்களும் இறைவன் திருவருட்பேற்றினை எய்தினரென்ப தூஉம் பௌத்த சமணமத வழிநிகழும் இஞ்ஞான் றைப் போலித் துறவொழுக்கம் பல்பெருந் தீங்கு கட்கும் இடனாய் நிற்றலின் அதனையொழித்து மனைவாழ்க்கையின்பாற்பட்ட தவநிலையில் நின்று தமக்கும் பிறர்க்கும் பயன்பெற்றொழுகிச் சிவபிரான் திருவடிக்குரியராதலே நம் சைவசமயப் பெரியார் தங் கோட்பாடா மென்பதூஉம் பெறப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, உலக முயற்சியை விட்டுத் தவநிலைக் கண் நிற்றல் நம்மனோர் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கடமையாம். ஏனென்றால், இவ்வு லகியல் வாழ்க்கை நீடு நிற்பதன்றாய்ச் சடுதியில் எதிர்பாராதே மறைந்தொழிவதாகலானும். இனி நாம் செல்லும் மறுமை யுலகத்திற்கு இங்கே துணைவராயிருந்த மனைவி மக்கள் சுற்றத்தார் நண்பர் என்னும் எவரும் நம்மோடு உடன்வந்து துணையாய் நிற்க மாட்டுவார் அல்லராகலானும், இம்மைக்கண் நம்மை இவ்வுடம்பில் வருவித்து வைத்துப் பலவகையின்பங்களையும் நமக்கு ஊட்டி அதன்பின் நம்மை அவ்வுடம்பினின்றும் பிரித்து வேறோர் உலகத்தில் வேறோர் உடம்பிற் புகுத்தவானாகிய இறைவன் ஒருவனே இங்கும் அங்கும் எங்குந் துணையாக நிற்பனாகலானும். இப்பிறவியில் நாம் நுகர்ந்த இன்பங்கள் எல்லாம் இன்பம் இத்தன்மையதென்று நமக்கு உணர்த்தும் அவ்வளவுக்கே பயன்படுவனவன்றி வேறு துன்பக் கலப்பில்லாமல் நீள இருந்து நம்மை மகிழ்விக்க மாட்டாவாகலானும், நிலைபேறில்லாப் பொருள்கள் நிலைபேறில்லாச் சிற்றின்பத்தையே தரக்கண்ட லால் நிலையான இன்பத்தைப் பெறவேண்டவார் எல்லாரும் நிலைமாறுதலன்றி ஒரு தன்மையனாய் விளங்கும் இறைவன்பாலன்றிப் பேரின்பத்தை நுகர்தல் ஏலாமையானும் நம் ஆசிரியன்மார்,

*"பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்*
*நில்லா உலகம் புல்லிய நெறித்தே"*

(தொல்காப்பியர்)

என்றும்,

*"ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற*
*பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்*
*சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே*
*யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே."*

(பட்டினத்தடிகள்)

என்றும்,

*"தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றேன் உண்ணாதே*
*நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறும் எப்போதும்*
*அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்*
*குனிப்புடை யானுக்கே சென்றூதாய், கோத்தும்பீ."*

(மாணிக்கவாசகர்)

என்றும் அருளிச் செய்து எல்லா வுணர்வுகளும் நமக்கு வாய்த்திருக்கும் இவ்வரிய மக்கட் பிறவி யிலே நாம் ஏமாந்து இறந்தொழியாமல், நமக்கு ஒப்பற்ற துணைவனாயிருக்கும் இறைவனை இறுகப் பற்றும்படி நம்பால் வைத்த இரக்கத்தால் நமக்கு அறிவு நெருட்டியிருக்கின்றார். இவர் தம் அருளுரைகளைக் கேளாமல், நான் என்று ஒரு பொருளில்லை, என்னின் வேறான உயிர்களும் இல்லை, இறைவன் உண்டென்பதும் பொய், வருவதும் போவதும் நிற்பது மாய உலக நிகழ்ச்சிகளெல்லாம் இயற்கையே என்று பாழ்ங் கொள்கைகளை வாய்க்கு வந்தபடி பேசி நம்ம னோர் இவ்வரியவாணாளை வீணாளாக்குவார்களா யின், உண்மைக்கு மாறுபேசி இறைவனைத் துணையாகப் பற்றாமையின், இறந்தொழிந்தபின், அடங்கா நாவினராகிய அவர்கள் துணையின்றி இருளுலகத்திற் சென்று பெருந்துன்பம் உழப் பார்கள்: இது திருவள்ளுவ நாயனார்,

*"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை*
*ஆரிருள் உய்த்துவிடும்."*

என்றமையாலும் உணரப்படும். கடவுளை நம்பாதவர்கள், கடவுளின் பெருந்துணையை நாடாதவர்கள், இறந்தபின் இருளுலகத்திற் சென்று துன்புறுகின்றார்கள் என்பதனை, அகக்கண் திறக் கப்பெற்று மறுமையுலகங்களின் நிகழ்ச்சிகளைக் காணவல்ல ஆங்கில ஆசிரியரான **ஸ்டெயிண்டன் மோசஸ் (Stainton Moses, M.A.)** என்பவர் தக்கார் பலர் முன்னிலையில் ஆராய்ந்து காட்டிய மெய்யு ரைகளால் இனிது விளக்கியிருக்கின்றார்.

*நன்றி:-* ***பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்***

ஒருநாள் ஒரு நரி இரைக்காகத் திரியும்போது, நல்ல திராட்சைப்பழக்கொத்து ஒன்று எதிர்ப்பட்டது. அதைப் பறிக்கும்படி அந்த நரி வேண்டிய மட்டும் குதித்தும் எட்டவில்லை. அப்போது அது "சீ புளிக்குமே" என்று சொல்லிப் போய்விட்டது.

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பாலபாடம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களில் பிம்பப் பிரதிஷ்டையும் யந்திரப் பிரதிஷ்டையும்

**(ஆலயத்துள் ஸ்தாபிக்கப்படும் தெய்வ பிம்பங்களின் பீடத்தில் யந்திரம் எதுவும் வைக்கக்கூடாது என்பதை ஆகமநெறியில் விளக்கும் கட்டுரை.)**

**டாக்டர். எஸ்.பி. சபாரத்னக் குருக்கள்**
இயக்குநர், இந்தியப் பண்பாட்டு ஆய்வு நிறுவனம், சென்னை.

இறைவன் அந்தர்யாமியாக எவ்விடத்தும் எதிலும் விளங்குகிறான். எனினும் அவன் எப்பொழுதும் இயல்பாகவே சாந்நித்யம் கொண்டு விளங்கும் இடங்கள் இவை இவை எனக்கூறும் ஆகம சூத்திரம் ஒன்று உண்டு.

***ஆரக்வதேச பில்வேச லிங்கேச குருவிக்ரஹே***
***சிவபக்த சரீரே ச ஸதாஸந்நிஹித: சிவ:***

இதன் பொருள்:- "கொன்றை மரம், வில்வமரம், பிம்பங்கள், குருவின் திருமேனி, சிவபக்தர்களின் திருமேனி ஆகிய இவ்விடங்களில் சிவபெருமான் எப்பொழுதும் இயல்பாகவே வெளிப்பட்டு விளங்குகிறார்". இந்தச் சுலோகத்தில் வரும் லிங்கம் என்பது பொதுவாகத் தெய்வ பிம்பங்களையும் சிறப்பாகச் சிவலிங்க வடிவத்தையும் குறிக்கும். இதனால்தான் ஆலயத்துள் வில்வம் முதலான விருஷப் பிரதிஷ்டை, பிம்பப்பிரதிஷ்டை, ரிஷி பிரதிஷ்டை, பக்தப் பிரதிஷ்டை எனப் பல்வேறு ஸ்தாபிதங்கள் செய்யப்படுகின்றன. ஆனால் இத்தகைய பிரதிஷ்டைகளுடன் யந்திரப் பிரதிஷ்டையை இணைக்கக்கூடாது.

நாம் விரும்பும் தெய்வத்தைப் பிம்ப வடிவத்திலும் வழிபடலாம்; யந்திர வடிவத்திலும் வழிபடலாம். எனினும் யந்திர வடிவ வழிபாட்டைக் காட்டிலும் பிம்ப வழிபாடே உத்தமமானது; பூரணமானது என்பதைப் பல ஆகமங்களும் தெளிவுபடுத்திக் கூறியுள்ளன. தெய்வத்தை கணக்கு வடிவில் வடித்துக் கொடுக்கும் தாளமானம் எனப்படும் அதிவிஞ்ஞான நுட்பம் பிம்ப நிர்மாணத்தில் மட்டுமே கையாளப்படுகிறது. யந்திர நிர்மாணத்தில் அல்ல. ஆலயப் பின்னணியில் கூறுவதாக இருந்தால், பிம்பம் என்பது ஐந்து பிரகாரங்களோடு உள்ள பரிபூரணமான ஆலயம் போன்றது. யந்திரம் என்பது அந்த ஆலயத்தில் உள்ள சிறு கோஷ்டம் போன்றது. பிம்பத்தின் தத்துவப் பின்னணி வேறு; யந்திரத்தின் தத்துவப் பின்னணி வேறு. பிம்பப் பிரதிஷ்டை முறை வேறு; யந்திரப் பிரதிஷ்டை முறை வேறு. இந்தக் காரணங்களால் பிம்பம் பிரதிஷ்டை செய்யப்படும் இடத்தில் சிவாலயம் விஷ்ணு ஆலயம் என்பனவற்றைப் பொறுத்த மட்டில் யந்திரஸ்தாபனம் செய்வது உசிதமன்று.

சர்வக்ஞானோத்திரம் என மிக உன்னதமான சிவாகமம் ஒன்று உண்டு. இந்த ஆகமத்தின் முக்கியத்துவத்தை முதலில் உணர்ந்துகொள்ளல் வேண்டும். சர்வ - அனைத்துமாக உள்ள; எல்லாம் - ஞானம் - சிவாகமங்கள்; உத்தரம் மேம்பட்டது. அதாவது காமிகம் முதல் வாதுளம் ஈறாக உள்ள இருபத்தெட்டு ஆகமங்கள் அனைத்திற்கும் மேம்பட்டுத் தனிநிலையில் விளங்குவது எதுவோ அது சர்வக்ஞானோத்தரம். சிவஞான சாஸ்திரங்களாகிய மூல ஆகமங்கள் இருபத்தெட்டு என்ற கணக்கில் சர்வக்ஞானோத்தரம் அடங்காது. இது ஏன் தனித்து விளங்குகிறது என்றால், மற்ற ஆகமங்கள் கிரியைகள் செய்யப்படும் முறைகளை மட்டும் விளக்கும். சர்வக்ஞானோத்தரம் அந்தக் கிரியைகளை ஏன் செய்யவேண்டும், செய்யாவிட்டால் என்னென்ன இடர்ப்பாடுகள் வரும் என்பதை நுட்பமாக விளக்கி, அந்தக் கிரியைகளின் விஞ்ஞானப் பின்னணியைத் தெளிவுபடுத்தும். எந்த ஒரு செயலையும் அது விஞ்ஞான நுட்பம் பொருந்த விளக்கிக் காட்டும். சிவஞான முனிவர் தனது மாபாடியத்தில் இந்த ஆகமத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிச்சிறப்பை ஆணித்தரமாக எடுத்துக்காட்டி, எல்லா ஆகமங்களின் பொருளையும் சர்வ ஞானோத்தர ஆகமத்துக்கு ஏற்ப முரண்படாத வகையில் காணவேண்டும் என நல்வழி காட்டு வதை நாம் கவனிக்க வேண்டும்.

பிம்பப் பிரதிஷ்டை செய்யப்படும் இடத்தில் யந்திரப் பிரதிஷ்டையை ஏன் செய்யக்கூடாது என்பதைச் சர்வக்ஞானோத்தர ஆகமத்தின் கிரியா பாதத்தில் வரும் பிம்பப் பிரதிஷ்டா விசார படலம் என்பது நன்றாக விளக்கிக் கூறுகிறது.

***திவ்யபிம்பம் யத்ராஸ்தி தத்ர யந்த்ரோ நேஷ்யதே***
***விக்ருதி; ப்ரக்ருதி ந்யாயாத் வ்யர்த்தம் பவதி தத்ரச***

என்பது, இந்தப் படலத்தில் வரும் சுலோகம்.

அதாவது அழகிய தாளமானத்துக்கு உட்பட்ட பிம்பம் எங்கே ஸ்தாபிக்கப்படுகிறதோ, அங்கே யந்திர ஸ்தாபனமானது உசிதமாகக் கருதப்படுவதில்லை. இரண்டையும் செய்தால் விக்ருதி யாகமும் பிரக்ருதி யாகமும் சேர்த்துச் செய்யப் படும்போது ஒன்றை ஒன்று வீணாக்கி பயனற்று விடச் செய்தல் போன்று, பிம்பப் பிரதிஷ்டை, யந்திரப் பிரதிஷ்டை ஆகிய இரண்டும் பயனற்றுப் போகும்.

இதுதான் மேற்காட்டப்பட்ட சுலோகத்தின் பொருள். இங்கே விக்ருதியாகம், பிரக்ருதியாகம் என்பவை யாகசாலையில் மேற்கொள்ளப்படும் விசேஷ யாகவகைகள். விக்ருதி யாகம் செய் யப்படும் குண்டத்தில் பிரக்ருதியாகம் செய்யக் கூடாது. அவ்வாறே பிரக்ருதியாகம் செய்யப்படும் குண்டத்தில் விக்ருதியாகம் செய்யக்கூடாது. இரண்டையும் ஒரே குண்டத்தில் செய்தால் ஒரு யாகப் பயன் மற்றொரு யாகப் பயனை அழித்து விடும். செய்கின்ற காரியம் வீணாகிப் போய்விடும். இதே நியாயப்படி, - விக்ருதி: ப்ரக்ருதி ந்யாயாத்- பிம்பத்தின் சாந்நித்யத்தை யந்திரமும், யந்திரத்தின் சாந்நித்யத்தை பிம்பமும் மறைத்துவிடும்; இரண்டும் பயனற்றதாகிவிடும். இதுதான் சர்வக்ஞானோத்தரம் கூறும் நுட்பம். பிம்பஸ்தாபனம் செய்யப்படும் இடத்தில் யந்திர ஸ்தாபனம் கூடாது என்பதைத் தெளிவுபடுத்த, இதைக்காட்டிலும் வேறு ஆகமப் பிரமாணம் வேண்டுமோ?

இப்பொழுதெல்லாம் கும்பாபிஷேகமோ, பிம்பப் பிரதிஷ்டையோ செய்யும்பொழுது, பலன் அதிக மாகவும் சீக்கிரமாகவும் கிடைக்கும் என்ற எண் ணத்திலோ அல்லது தாம் கொடுக்கும் யந்திரத் தால் பிம்பத்திற்கு சக்தி அதிகமாக வந்துசேரும் என்ற தவறான கணக்கிலோ, சிலர் யந்திரங்களைக் கொண்டுவந்து கொடுத்து பீடத்தின் கீழே ஸ்தா பிக்கச் சொல்லி வற்புறுத்துகின்றனர். பிம்ப ஞானமும் இல்லாமல் யந்திரஞானமும் இல்லாமல் இத்தகையோர் செய்யும் தவறான செயல்களால், விஞ்ஞானமயமான நுட்பங்களை உள்ளடக்கி யுள்ள கும்பாபிஷேகம் பிம்பப் பிரதிஷ்டை முத லான உத்தமமான கிரியைகள் பயனற்றுப் போய்விடுகின்றன.

இவ்வாறு கூறுவதால், யந்திரப் பிரதிஷ்டை தேவையில்லை எனக் கூறுவதாக எடுத்துக்கொள் ளக்கூடாது. யந்திரப் பிரதிஷ்டையை முறைப்படி தனியே செய்வதில் எவ்வித குற்றமும் கிடையாது. ஸ்ரீராஜராஜேஸ்வரி ஆலயம், ஸ்ரீபுவனேஸ்வரி ஆலயம், ஸ்ரீகாமாக்ஷி ஆலயம் முதலான சுதந்திர சக்தி ஆலயங்களில், மூல பிம்பத்தின் அருகே, பீடத்தைச் சார்ந்ததாக அந்தந்த யந்திர வழிபாடு நடைபெற்று வருகிறது. சாக்த ஆகமப்படி இது பொருத்தமே. இங்குங்கூட, தனியே யந்திரம் செய்து, மூலபிம்பத்தின் பீடத்தின் கீழே, ரத்தினம், தாதுக்கள் முதலானவற்றை வைக்கும்போது அந்த யந்திரத்தையும் வைத்தல் என்பது தவிர்க் கப்படல் வேண்டும். சாக்த ஆகமப்படி, மூலபிம்ப தத்துவமும், யந்திர தத்துவமும் மூலபிம்ப ஆவ ரண சக்திகளும் யந்திரத்தின் ஆவரண சக்திகளும் ஒன்றாகவே விளங்குவதால் மூலபிம்பத்தின் அருகே, வெளியில் தனியே யந்திர வழிபாடு செய்வதில் தவறு இல்லை. கவனிக்கவேண்டியது என்னவெனில் அந்த யந்திரத்தை ஆதார சிலைக்கு

*தொடர்ச்சி பக்கம் 30இல்....*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்**

கொலையாவது உயிர்களை அவைகளுக்கு இடமாகிய உடம்பினின்றும் பிரியச் செய்தல். உயிர்களுக்கு இதஞ் செய்தலே புண்ணியமும் அகிதஞ் செய்தலே பாவமுமாம். கொலையைப் பார்க்கினும் அகிதம் வேறில்லாமையால், கொலையே பாவங்களெல்லாவற்றிற்குந் தலையாயுள்ளது. கொல்லாமையைப் பார்க்கினும் இதம் வேறில்லாமையால், கொல்லாமையே புண்ணியங்களெல்லாவற்றிற்குந் தலையாயுள்ளது.

கொலையில்லாத ஞானமே ஞானம், கொலையில்லாத தவமே தவம், கொலையில்லாத தருமமே தருமம், கொலையில்லாத செல்வமே செல்வம். ஆதலினாலே, சோர்வினாலும் கொலைப்பாவம் சிறிதும் விளையாவண்ணம் எப்பொழுதும் அருளோடு கூடிச் சாவதனமாக இருத்தல் வேண்டும். கொலை செய்ய ஏவினவரும் கொலை செய்யக் கண்டும் அதனைத் தடுக்காதவரும், ஒருவன் செய்த கொலையை மறைத்து அவனை இராசாவுடைய தண்டத்துக்குத் தப்புவித்தவரும், கொலை செய்தவரோடு பழகினவரும் கொலைப் பாவிகளே யாவர்.

கொலைப்பாவிகள் எண்ணில்லாத காலம் நரகத்துன்பத்தை அனுபவித்து, பின்பு பூமியிலே பிறந்து, ஈளை காசம், குட்டம், பெருவியாதி, நெருப்புச்சுரம், கைப்பிளவை முதலிய நோய்களினால் வருந்தி உழல்வார்கள்.

பிறவுயிரைக் கொல்லுதல் போலத் தன்னுயிரைக் கொல்லுதலும் பெருங் கொடும் பாவம். கடவுளை வழிபட்டு உயிர்க்கு உறுதிசெய்து கொள்ளும் பொருட்டுக் கிடைத்த கருவி சரீரம். ஆதலால் எவ்வகைப்பட்ட வியாதிகளினாலே வருத்தமுற்றாலும், சரீரத்தைப் பாதுகாத்துக் கொண்டே இருத்தல் வேண்டும். கோபத்தினாலும் வியாதி முதலிய பீடைகளினாலும் தம்முயிரை வலிய விட்டவர் கும்பிபாகம் முதலிய நரகங்களிலே அறுபதினாயிரம் வருடங் கிடந்து வருந்தி, பின்பு சக்கிரவாளகிரிக்குப் புறத்தில் உள்ள இருட்பூமியிலே எண்ணில்லாத காலங்கிடப்பார்.

*நன்றி:-* ***பாலபாடம்***

*29ம் பக்கத் தொடர்ச்சி........*

உள்ளே வைத்து மறைத்து விடக்கூடாது. சாக்த ஆகம வழிபாட்டு முறையைச் சைவ ஆகம வழிபாட்டுக் கோயில்களில் பின்பற்றக்கூடாது. ஏனெனில், சைவாகம நெறிப்படி, பிம்ப நிர்மாணம் வேறு; யந்திர நிர்மாணம் வேறு.

சைவ ஆலயங்களிலும் வைஷ்ணவ ஆலயங்களிலும் பிரதிஷ்டை செய்யப்படும் பிம்பங்கள், சிற்பியர்தம் தாளமானப்படி மிகமிக நேர்த்தியாக அமைத்து, ஒவ்வொரு பிம்பமும் ஒவ்வொரு முழுப் பிரபஞ்சமே எனும்படி பரிபூரணமாக இருப்பவை. இதன்மேலும் இவற்றுக்கு யந்திர சேர்க்கை என்பது, அந்தப் பரிபூரணத் தன்மையைப் பாழ்படுத்திவிடும். வீணாகிப் போகும் காரியத்தை நாம் ஏன் விடாப்பிடியாகச் செய்துகொண்டிருக்க வேண்டும்?

சைவ ஆகமங்கள் வெளிப்படுத்தும் உசிதமான உன்னதமான செயல்களையே ஆலயங்களில் மேற்கொள்வோமாக.

*நன்றி:-* ***மெய்கண்டார் - மே 2002***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெண் சித்தர்கள்



# ஸ்ரீ கொங்கணர் (திருப்பதி)

Dr. எஸ். லோகநாதன் B.S.M.S.(India) J.P
மரகதம் கிளினிக், நாநாட்டான், மன்னார்.

இவர் போகருடைய திருமகன் ஆவார். தமிழ்நாட்டின் சேரநாட்டிற்கு வடபகுதியில் உள்ள கொங்கண நாட்டின் மாதரசிக்குப் போகருடைய அருளால் தோன்றியவர் எனக் "கர்ணபரம்பரைக் கதை" கூறுகின்றது. பதினெண் சித்தர்களில் ஒருவரான கருவூரார் தமது பாடலில் "கொங்கணர் தந்தை போகநாதர்" என்று கூறுவதாலும் அறியலாம். திருவள்ளுவர் காலத்திலிருந்த முதலாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர் கொங்கணர் என்பதைச் சித்தமருத்துவ நூல்கள் மூலம் அறியலாம். இவர் பதினெண் சித்தர்களில் மிகவும் கோபக் குணம் உடையவர். இவரின் கோபத்தை உணர்த்துவதற்கு ஒரு கதை உண்டு.

கொங்கணர் ஒருசமயம் தவமிருந்த சமயம் தம்மீது எச்சமிட்ட கொக்கினைச் சினந்து தனது கண்ணால் பார்த்தபோது அவரது தவவலிமையால் அக்கொக்கு எரிந்து சாம்பலானது. தம்முடைய வித்தையில் தானே கர்வம் கொண்டிருந்தார். செருக்கால் சித்தரின் திறம் அழியும் என்பதை இவர் மறந்து அதிக கர்வம் கொண்டிருந்தார். சிலநாள் சென்றபின் வழக்கம் போல ஒரு வீட்டிற்கு முன்நின்று யாசகம் கேட்டார். அவ்வீடு திருவள்ளுவருடையது என்பது கொங்கணருக்குத் தெரியாது. கணவனின் பணிவிடைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வாசுகி அம்மையார் கணவனின் பணிவிடைகளை முடித்துக்கொண்டு சிறிது காலந்தாழ்த்திப் பிச்சை இட்டார். காலந்தாழ்த்தியமை காரணமாகச் சினங்கொண்டு அம்மையாரைக் கொங்கணர் பார்த்தார். வாசுகி அம்மையாரின் கற்புத்தீ இவர் பார்வையை ஒன்றும் செய்யவில்லை. தன்னை உற்றுப் பார்த்த முனிவரைக் குறுநகையுடன் "கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா?" என்று கேட்டார். இதைக்கேட்ட கொங்கணர் தன்னைவிடத் தவவலிமை மேலான நங்கையின் திறம் கண்டு நாணத்துடன் அன்றே தனது செருக்கினைக் கைவிட்டார்.

இவர் தனது சித்தவைத்தியத் தவவலிமையால் கீழ்வரும் நூல்களை இயற்றினார். கொங்கணர் முக்காண்டம் - இது 3000 பாடல்களைக் கொண்டது. முக்காண்ட சூத்திரம், வைப்புநூல், பட்சிணி, சரக்குவைப்பு 100, நவக்கிரக பொக்கிஷம், கொங்கணர் தூக்கியம் 10, சூத்திரம் 13, கொங்கணர் 40, கொங்கணர் 8, கொங்கணர் தீட்சாவிதி ஆகியன இவர் இயற்றிய மருத்துவ நூல்களாகும். இவர் திருப்பதியில் சமாதிநிலை எய்தினார்.

ஒருத்தி அழகும் விவேகமும் உள்ள ஒருவனை விவாகஞ் செய்யவேண்டும் என்று வெகு நாளாகக் காத்திருந்தாள். ஒருநாள் அழகுள்ள புருஷன் வந்தான். அவன் விவேகியோ என்று அறியும்பொருட்டு அவனோடு பேசிக்கொண்டிருந்தாள். அப்பொழுது அங்கே சடசட என்றது. அவன் "அது என்ன" என்றான். "அது உடும்பு" என்றாள். "அதில் ஓரிறகு பிடுங்கிவா; காது குடைதல் வேண்டும்" என்றான். "உடும்புக்கு இறகு இருக்குமா! போ" என்று அவனை அனுப்பிவிட்டாள். சிலநாள் சென்றபின், வேறொருவன் வந்தான். அவனுடனே "முன் ஒரு மூடன் உடும்பிலே இறகு பிடுங்கி வரச்சொன்னான்" என்றாள். அதற்கு அவன் சிரித்து, அவன் ஆமை என்று நினைத்தான்போலும்" என்றான். இவன் அவனிலும் பெருமூடன் என்று எண்ணி, இவனையும் இகழ்ந்து போகச் சொன்னாள்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பாலபாடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபெருமான் தாயினும் நல்லவர்

சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்கள்

பல வளங்களும் நிறைந்த நகரங்களுள்ளே சிறந்தது காவிரிப்பூம்பட்டணம். அப்பட்டணத்திலே **அரதனபாலன்** என்னும் ஒரு வணிகர் திலகன் இருந்தான். அவன் தன் மனைவியுடன் வாழும் நாளிலே, பிள்ளைப்பேற்றை விரும்பிச் சிவபெருமானைப் பூசித்து வந்தான். அப்பூசா பலத்தினாலே, உத்தம குணங்கள் நிறைந்த ஒரு சற்புத்திரியைப் பெற்றான். அக்குழந்தைக்கு **அரதனவதி** என்று சுற்றத்தார்கள் பெயர் வைத்தார்கள். அரனவதி வளர்ந்து தக்க பருவம் அடைந்தாள். திரிசிராப் பள்ளியில் வசித்த **தனகுத்தன்** என்னும் ஒரு வணிகன் அவளை விவாகஞ்செய்து இல்லறத்தை நடாத்தி வாழ்ந்திருந்தான்.

சிலகாலம் சென்ற பின்பு, மருமகனாகிய தனகுத்தன், மனைவியோடு தனது நகரத்துக்குச் செல்லுதல் வேண்டும் என்று மாமனாகிய அரதன பாலனுக்கு அறிவித்தான். மாமன் இரத்தினம் முதலிய பொருள்களைக் கொடுத்துச் "செல்லுவீர்களாக" என்று அனுமதிகொடுத்து அனுப்பினான். தனகுத்தனும் அரதனவதியும் திரிசிராப்பள்ளியை அடைந்து சிவபுண்ணியங்களைச் செய்திருந்தார்கள். அரதனவதி நாயகனுடைய கட்டளைப்படி திரிசிராமலையில் எழுந்தருளியிருக்கும் செவ்வந்தி நாதரையும் அம்மையாரையும் வணங்கி வெள்ளிக் கிழமை விரதம் அநுட்டித்து வந்தாள்.

இவர் இருவரும் இப்படி இருக்குநாளிலே, காவிரிப்பூம்பட்டணத்திலிருந்த அரதனபாலன் தேக வியோகமாயினான். சுற்றத்தார்கள் தனகுத்தனுக்கும் அவன் மனைவிக்கும் அறிவித்தார்கள். அவர்கள் அறிந்து துன்பக்கடலில் அமிழ்ந்தி, காவிரிப்பூம்பட்டணத்தை அடைந்தார்கள். தனகுத்தன் மாமனுடைய ஈமக்கடன்களையும் மற்றைய கிரியைகளையும் செய்துமுடித்தான். பின்பு, மனைவியுடன் திரிசிராவை அடைந்து சிவவிரதங்களை அனுட்டித்தல், விருந்தினரை உபசரித்தல் முதலிய பல தருமங்களைச் செய்திருந்தான்.

இருக்குநாளிலே, மனைவி வயிற்றிலே ஒரு கருப்பம் உண்டாயிற்று. ஒன்பது மாசங்கள் நிறைந்தன. காவிரிப்பூம்பட்டணத்திலிருந்த தாயும் தன் மகளுடைய செயலை அறிய வேண்டும் என்று நினைத்தாள். மழை அதிகமாகப் பெய்து பொன்னி நதி பெருக்கெடுத்துச் சென்றது. ஆறு பாயுந்தடையினால், தாய் மகளிடம் வரமுடியவில்லை. அரதனவதி அதனை அறியாதவளாய், எனது அன்னை பிரசவத்துக்குரிய பொருள்களைக் கொண்டு இன்று வருவார்; நாளை வருவார் என்று பலவாறாக நினைத்தாள்.

அரதனவதி இப்படி நினைக்கும் சமயத்தில், திரிசிராமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் அவளுடைய தாயைப்போல முதுகில் நரைத்த கூந்தல் பொருந்தவும், மூங்கிற்றண்டு திருக்கரத்தில் விளங்கவும், திருமுகம் அசையவும், நெற்றியில் வியர்வை துளிக்கவும், இளைப்புத் தோன்றவும், நெடுமூச்செறியவும் நின்று நின்று சென்றருளினார். பல பண்டங்களை இருபெண்கள் சுமந்துகொண்டு அவருக்குப் பின்னே சென்றார்கள். அவர் தூரத்தில் வருவதைக்கண்ட அரதனவதி, அவரைத் தனது மாதா என்று துணிந்தாள். சமீபித்தவுடன் எதிர்சென்று இரண்டு பாதங்களிலும் விழுந்து வணங்கினாள். மாதாவாக வந்த சிவபெருமான் அவளை இருகரங்களாலும் தழுவி அருள்மொழிகளைக் கூறி ஆசனத்தில் இருந்தார். அரதனவதி பண்டங்களைக் கொண்டு வந்த பெண்களைப் போசனஞ் செய்வித்தாள்.

மற்றைநாள், அரதனவதி வயிறுநொந்து வருந்தினாள். தாயாகிய சிவபெருமான் அவளை எடுத்தணைத்து முதிர்ந்த அன்பினால் மருத்துவத் தொழில்கள் எல்லாவற்றையுஞ்செய்தார். அப்பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள். பிரசவித்த அம்மகளுக்குச் செய்யவேண்டிய பரிகாரங்களை எல்லாம் செய்தார். அக்குழந்தையை ஒருமாதம் வரையும் வளர்த்தார்.

ஆற்றுப்பெருக்கு வற்றியது. முன்னர் ஆற்றுப் பெருக்கினால் தடைப்பட்டிருந்த தாய், தன் மகளின் செயலை அறியும்படி வந்தாள். தனது மாமி இல்லத்தில் வருவதைத் தனகத்தனுங் கண்டான். இவ்விருவரில் அன்னியர் யாவரோ என்று நினைத்தான். முன்னர் வந்த தாயாகிய சிவபெருமான் பிரசவ அறையுள் இருந்தார். பின்னர் வந்த தாய் பிரசவ அறையுட் புகுந்து, அவருக்கு எதிர்முகமாக இருந்தாள். அரதனவதி அதிசயங்கொண்டு, எனது தாய் இவர்களுள் யார் என்று மயங்கிச் சமீபித்தாள். முன்னர்த்தாயாக வந்த சிவபெருமான் மின்னலைப் போலத் திருக்கோயிலினுள்ளே மறைந்தருளினார்.

அடியார்க்கெளியராய் வந்தருளும் சிவபெருமானை உலகத்தார் அனைவரும் "தாயினும் நல்லவர்; நல்லவர்" என்று சொல்லி வணங்கினார்கள். தனகுத்தனும் மனைவியும் தாயுமானேசுரரை அனுதினமும் பணிந்து சிவலோகத்தை அடைந்தனர்.

**திருநாவுக்கரசு சுவாமிகள்**

**தாயுமா யெனக்கேதலை கண்ணுமாய்ப்**
**பேயனே னையுமாண்ட பெருந்தகை**
**தேயநாதன் சிராப்பள்ளி மேவிய**
**நாயனாரென நம்வினை நாசமே.**

*நன்றி:- சைவப்பிரகாசிகை*

ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு பிள்ளை மற்றொருவனை நோக்கி, "சிநேகிதனே, நீ கடவுள் இருக்கின்ற இடத்தைச் சொல்லுவாயாகில் உனக்கு ஒரு மாம்பழம் தருவேன்" என்றான். அதற்கு அவன் "தோழா, நீ கடவுள் இல்லாத இடத்தைச் சொல்வாயாகில், உனக்கு இரண்டு பழம் தருவேன்" என்றான். இவர்களிற் பின் கேட்டவன் புத்தி பெரியது.

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பாலபாடம்**

எங்களிடம்,

**ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூஜைப் பொருட்கள், கலைநயம் மிக்க சில விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக்குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக்குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச்சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாக மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங்கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்துவிளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.**


# கலையரசி


**23/1, விவேகானந்த மேடு, கொழும்பு-13.**

**தொ.பே: 478885**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









**சைவநீதி நடத்திய சைவசமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பதக்கம் அணிவதையும் போட்டியை நடத்திவைத்த திரு. க. சீனிவாசகம் அவர்களுக்கு சைவநீதி கௌரவ ஆசிரியர் சைவப்புலவர்மணி பட்டாடை கொடுத்துக் கௌரவிப்பதையும் படத்தில் காணலாம்.**

Regd. No. QD/25/News 2002 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் இல. 712, புளுமெண்டல் வீதி கொழும்பு - 15. கலர் அச்சகத்தில் அச்சிட்டு 30-07-2002 இல். வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org